Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :203 ஆனி 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை 19 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## உ/த பரீட்சை திகதியில் மாற்றம்!

கொழும்பு, ஜூன் 19

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் பாடத்திட்டத்தை முழுமைப்படுத்தவும், பரீட்சைக்கு தயாராகவும் உரிய கால அவகாசம் வழங்கப்படும். ஆசிரியர்கள், மாணவர்களின் அபிப்பிராயத்தை கருத்தில் கொண்டே உயர்தர பரீட்சையை நடத்தத் தீர் 11 ➤

## மைத்திரி, ரணிலுக்கு தயாராகிறது பொறி!

கொழும்பு, ஜூன் 19

மைத்திரி ரணில் தலைமையிலான ஆட்சியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி விவகாரம் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. இந்தநிலையில், மத் 15 ➤

## ராஜபக்ஷ வினர் ஒருபோதும் தமிழருக்கு தீர்வைத் தரார்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

நல்லாட்சியில் புதிய அரசமைப்புக்கான பணிகளைக் குழப்பியடித்த ராஜபக்ஷ தரப்பினர் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் தீர்வு வழங்க முன்வரமாட்டார்கள் இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய 15 ➤



## இனிமேல்தான் அதிரடி ஆட்டம்

### சந்திரிகா மிரட்டுகின்றார்

கொழும்பு, ஜூன் 19

அதிகார வெறித்தனத்திலும் பதவி ஆசையிலும் இருப்பவர்களுக்கு எதிராக மங்கள சமரவீரவுடன் இணைந்து அதிரடி ஆட்டம்காட்ட நான் தயாராக இருக்கின்றேன் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநா 11 ➤

# கோத்தாபயவின் செயலணிக்கு எதிராக சம்பந்தன் போர்க்கொடி

### வடக்கு, கிழக்கை சிங்களமயமாக்க வேண்டாம் எனவும் வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 19

பௌத்த மதத்தையும், தொல்பொருள் சின்னங்களையும் பாதுகாத்தல் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தால் உடமையாக்கப்படும் நிலப்பரப்பில் சிங்களவர்களைக் குடியமர்த்தி அதனூடாக கிழக்கு மாகாணத்தையும், இயலுமானவரையில் வடக்கு மாகாணத்தையும் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களாக மாற்றியமைத்து, இருமாகாணங்களுக்கும் இடையிலான மொழி ரீதியான தொடர்ச்சியை இல்லாமல் செய்வதே புதிதாக நிறுவப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் நோக்கமாகும். 15 ➤

## பொறுப்புக்கூறலில் இருந்து மைத்திரி விலக முடியாது

### மஹிந்த அணி அழுங்குப்பிடி

கொழும்பு, ஜூன் 19

'உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பொறுப்புக் கூறலிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் விலக முடியாது' இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊட 15 ➤

## புலிகளுடைய ஆயுதங்களை தேடி முல்லையில் தேடுதல்

முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில், விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட வெடிபொருள்களைத் தேடி தோண்டும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து புதுக்குடியிருப்பு கோம்பாவில் இரண்டாம் வட்டாரப் பகுதியில் பகுதியில் தனியார் ஒருவரின் 11 ➤

## உலகக்கிண்ணத்தில் ஆட்டநிர்ணய சூதா?




விரிவு பக்.03

## பதவி விலக முடிவில்லை

### மத்திய வங்கி ஆளுநர் இவ்வாறு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

'பதவி விலகுவது தொடர்பில் நான் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. அரசும் இது குறித்து எனக்கு எதனையும் அறிவிக் 15 ➤

## சூட்சுமமாகக் கடத்திய 20கிலோ கஞ்சா மீட்பு!

வவுனியா, ஜூன் 19

வாகனத்துக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து கடத்திச் செல்லப்பட்ட 20 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். 11 ➤

## காட்டாட்சிக்கு இனிமேல் இடமில்லை

### மங்கள அதிரடி

கொழும்பு, ஜூன் 19

'இலங்கையில் மீண்டும் காட்டாட்சி இடம்பெறுவதற்கு மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். அந்த வழியில் செயற்பட முயற்சிப்பவர்களை மக்களுடன் சேர்ந்து நாம் வீட்டுக்கு அனுப்பிவைப்போம்' இவ்வாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

'இந்த நாடு மக்களுக்குத்தான் சொந்தம். அதிகார வெறியிலும் பதவி ஆசையிலும் இருப்பவர்களுக்கு இந்த நாடு சொந்தமல்ல. நாட்டை யார் 15 ➤

சௌகரியமானதும் பாதுகாப்பானதுமான டிஜிட்டல் வங்கிச்சேவை

எமது டிஜிட்டல் வங்கிச்சேவைகளினூடாக உங்களுடைய பரிவர்த்தனைகளை பாதுகாப்பான மற்றும் சௌகரியமான முறையில் மேற்கொள்ளுங்கள்.

DFCC mySPACE — தன்னியக்க வங்கிச்சேவை
DFCC Virtual Wallet — DFCC வேர்சுவல் வொலற்
DFCC iCONNECT — DFCC ஐகனெக்ட்
DFCC PAY — DFCC பே
DFCC இணைய வங்கிச்சேவை

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# கொள்ளையடிக்கப்பட்ட நிதியை மீட்பதற்கு அரசியல் போராட்டம்

## தாமும் தயார் என்கிறார் சம்பிக்க

**கொழும்பு, ஜூன் 19**

**இலங்கையில் இடம்பெற்ற மிகப் பயங்கரமான தேசிய மோசடியானது இலங்கைக் கடற்படைக்குக் கிடைக்கப் பெறவிருந்த நிதி தனியார் நிறுவனமொன்றினால் கொள்ளையிடப்பட்டதாகும். இதற்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளோம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நிஷங்க சேனாதிபதி என்ற நபர் நான் அறிந்த வகையில் அரச அதிகாரியொருவரோ, பாதுகாப்புத் துறையின் அங்கத்துவரோ, பொலிஸ் அதிகாரியோ அல்லது ஏதேனுமொரு அரச சேவையுடன் தொடர்புடைய நபரோ அல்லர். எவ்வாறிருப்பினும் நாம் எதிர்காலத்தில் நேரடியாக இதில் தொடர்பு கொள்ள எதிர்பார்த்துள்ளோம். இலங்கையில் இடம்பெற்ற மிகப் பயங்கரமான தேசிய மோசடியானது இலங்கைக் கடற்படைக்குக் கிடைக்கப்பெறவிருந்த நிதி தனியார் நிறுவனமொன்றினால் கொள்ளையிடப்பட்டதாகும். அது தொடர்பில் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவற்றையும் கண்காணிப்பதோடு நாம் இதில் நேரடியாகப் பங்குபற்றுவோம்.

சட்டவிரோதமாகத் துப்பாக்கிகள் பாவிக்கப்பட்டமை தொடர்பில் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. முழு நாடும் ஒரு பாதாளக் குழுவுக்கு அடிபணிய வேண்டிய சூழல் ஏற்படக் கூடிய நிலைமை ஏற்பட்டது என்பது கவலைக்குரியதானாலும் அதனைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். 2012 - 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்த எதிர்பார்த்துள்ளோம்.

அவற்றை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவும் தயாராகவுள்ளோம். இதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்து அரசியல் போராட்டமொன்றைத் தொடர நாம் தயாராகவுள்ளோம். அவருக்கு எம்மால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதா இல்லையா என்பதை அவர் ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும்- என்றார். (ப)

# என்கதியே உங்களுக்கும்!

## சசிகலாவுக்கு அனந்தி அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 19

தமிழரசுக் கட்சியினர் தங்களின் சுயலாப அரசியலுக்கு எவ்வாறு என்னைக் கறிவேப்பிலையாகப் பயன்படுத்தினார்களோ அதேபோலவே தற்போது சசிகலா ரவிராஜை பயன்படுத்துகின்றனர் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தமிழ் மக்கள் மாற்றுத்தலைமையான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை பலப்படுத்த வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நிச்சயமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியாக தேர்தலில் களமிறங்கியுள்ளது. இந்த முறை எமக்கு மக்கள் வாக்களித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். சுமந்திரன் மீது குண்டுத் தாக்குதல் நடத்த வந்ததாகக் கூறி முன்னாள் போராளிகள் இன்றைக்கும் தடுப்பில் இருக்கின்றார்கள். ஆனால் தேர்தல் காலத்தில் மட்டும் விடுதலைப் புலிகளுடைய அனுதாப வாக்குகளைப் பெறுவதற்கு மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்த சுமந்திரன் திடீர் அக்கறை கொண்டுள்ளார். விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறிய அதே சுமந்திரன் தேர்தலுக்காக அரசியல் நாடகமாடி வருகின்றார். இம்முறை பாடம் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் கற்பிக்க வேண்டும். தற்போதைய தேர்தலில் சரிந்துள்ள வாக்கு வங்கியை ஓரளவு சரி செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மனைவியை களமிறக்கியுள்ளனர். இந்தச் செயற்பாட்டைப் பார்க்கும் போது எனக்கு என்ன தோன்றுகின்றது என்றால் நான் அரசியலுக்கு வரும் போது தமிழ் அரசுக் கட்சி என்னை எவ்வாறு கருவேப்பிலையாகப் பாவித்ததோ அதேபோலவே சசிகலா ரவிராஜுக்கும் நடைபெறலாம். எனவே அவர் அவதானமாக இருக்க வேண்டும். அனுபவத்தின் அடிப்படையில் நான் இதனைக் கூறுகின்றேன் -என்றார். (ப-20)

# மத்திய வங்கி அதிகாரிகளை கடிந்தது கோத்தாபயவின் தேர்தல் கால நாடகம்

## த.தே.ம.மு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 19

மக்களுக்குத் சேவை செய்கிறேன் என்பதை பாசாங்கு செய்வதற்காகவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மத்திய வங்கி அதிகாரிகள் மற்றும் சுகாதார அதிகாரிகளை அழைத்துக் கோபத்துடன் பேசியிருக்கிறார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேர்தல் .நெருங்கும் காலத்தில் மத்திய வங்கி அதிகாரிகள் மற்றும் மருத்துவத் துறை சார் அதிகாரிகளைச் சந்தித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கலந்துரையாடும்போது அதிகாரிகளைக் கடுமையாகக் கடிந்து கொள்வதை ஊடகங்கள் மூலம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்தச் செயற்பாடானது மக்களுக்கு தான் சேவை செய்கிறேன் என்ற தோற்றப்பாட்டை அவர் காட்டுவதாகவோ உள்ளது. தமிழ்ப்பிரதேசங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றால் அளவு கணக்கு இல்லாமல் மணல் அகழ்வு நடைபெறுகிறது. கரையோரப் பிரதேசங்களில் நடைபெறும் மணல் அகழ்வால் கடல் நீர் உட்புகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போதைய ஜனாபதியும் இதைத்தான் செய்கிறார்,வடமராட்சி கிழக்கில் இவ்வாறு அளவு கணக்கு இல்லாமல் மணல் அகழ்வு நடைபெறுவதால் அந்தப் பகுதி மக்கள் போராட்டம் செய்யும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். இன அழிப்புக்கு உதவியாக இருந்த இந்த அரசுக்கு முண்டு கொடுக்கும் அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டுடன் இவ்வாறு மணல் அள்ளும் நடவடிக்கையில் பாரபட்ச நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.தமிழ் மக்களுக்கு இவ்வாறு அநீதி இழைக்கும் போது அன்று கூட்டமைப்பு , மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு பார்த்துக் கொண்டு இருக்கின்றதா என்று டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால் இன்று அவர் அமைச்சராக இருக்கும்போது அவருடைய அரசாங்கம் செய்வதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். இந்த நிலையில் மக்களுக்குச் சேவை செய்வது போலக் காட்டுவதற்கு அரச அதிகாரிகளை எச்சரிப்பது போல ஜனாதிபதி நடந்து கொள்கிறார் -என்றார். (ப-7)

# 1000 ரூபா விவகாரம் அடுத்த வாரம் பேச்சு

கொழும்பு,ஜூன் 19

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதே அரசின் நோக்கமாகும். அதற்காக அம்மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பும் கூட. எனவே, ஆயிரம் ரூபா தொடர்பில் அடுத்த வாரமும் பேச்சு இடம்பெறும்.

இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பளம் தொடர்பில் அமைச்சரவையில் பேசப்பட்டதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முதலாளிமார் சம்மேளனப் பிரதிநிதிகளுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றும் (நேற்று முன்தினம்) கலந்துரையாடினார். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்பதே ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கோரிக்கையாகவும் இருந்தது. அதனை வழங்குமாறு முதலாளிமார் சம்மேளனத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்தோம். அதற்கான யோசனைகளையும் முன்மொழிந்தோம்.

முதலாளிமார் சம்மேளனத் தரப்பில் இருந்தும் சில கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

ஆகவே புதிய யோசனைகளுடன் பிரதமரை, முதலாளிமார் சம்மேளனம் அடுத்த வாரம் சந்திக்கவுள்ளது. - என்றார். (க-44)

# இன உணர்வுடன் தமிழர் வாக்களிக்கவேண்டும்

## ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 19

ஒரு சில தமிழர்கள் இன உணர்வின்றி வாக்களிப்பதால், வடக்கில் சிங்கள முஸ்லிம் கட்சிகள் தமது வாக்கு வங்கியையும் மீறிய பலத்தைப்பெறுகின்றன. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் தத்தமது இனம் சார்ந்தே வாக்களிப்பார்கள். தமிழ் கட்சிகளுக்கு அவர்கள் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள். ஆனால் தமிழர்கள்தான் ஏதோ ஒரு வகையில், குறைந்த அளவிலாவது முஸ்லிம் மற்றும் சிங்களக் கட்சிகளுக்கு வாக்களிக்கின்றனர். குறிப்பாக வடக்கைப் பொறுத்த வரையில் சிங்கள மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கு மிகக் குறைந்த அளவிலான வாக்குகளே காணப்படுகின்றன. எனினும் தமிழ் மக்கள் ஒரு சிலர் இவ்வாறு அவர்களுடைய கட்சிகளுக்கு வாக்களிப்பதனால், தங்களுடைய வாக்கு வங்கிக்கு மீறிய ஒரு பலத்தை அவர்கள் பெறுகின்றனர். ஒவ்வொரு முறையும் இந்த விடயம் இடம்பெறுகின்றது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும்.

எது எவ்வாறாயினும் தமிழர்கள் என்ற இன உணர்வுடன், மிக அதிகளவான எமது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கின்றமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் - என்றார். (ப-246)

# இந்தியாவால் வருவோரை எமக்கு காட்டித்தாருங்கள்

*சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 19
இந்தியாவிலிருந்து யாரா வது இரகசியமான முறை யில் உங்கள் பிரதேசத் துக்கு புதிதாக வருகை தந்திருந்தால் அவர்கள் பற்றிய தகவல்களை உட னடியாக அறிவியுங்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.
இதுபற்றி அவர் அனுப் பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளதாவது:
இலங்கையில் கொரோ னாத் தொற்றின் பரம்பல் தற்போது கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள் ளது. பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மத்தியி லேயே புதிய நோயாளர் கள் இனங்காணப்படுகின் றனர். இதேவேளை இந் தியாவில் தற்பொழுது கொரோனா நோயின் பரம்பல் மிகத் தீவிரமாக அதிகரித்துள்ளது. இந்த நோய் காரணமான இறப் புக்களும் அதிகரித்து வருகின்றன. இந்த சூழ்நி லையில் இரகசியமாக மீன்பிடிப்படகுகள் மூலம் தமிழ்நாட்டிலிருந்து சிலர் இங்கு வருகை தரலா மென எதிர்பார்க்கப்படு கின்றது. இவர்களால் இலங்கையில்கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது. அவ் வாறு எமது நாட்டுக்கு வருகை தருபவர்களை சுகாதார பாதுகாப்பு நடை முறைகளைப் பின்பற்றி தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி பரிசோத னைக்கு உட்படுத்துவதன் மூலம் எமது நாட்டில் இந் தநோய் பரவுவதை தடுக் கக் கூடியதாக இருக்கும் என்று பணிப்பாளர் குறிப் பிட்டுள்ளார். (த)

# 2011 இல் உலகக்கிண்ணத்தை பணத்துக்காக விற்றுவிட்டனர்

## மஹிந்தானந்த பரபரப்புக் குற்றச்சாட்டு சங்கா, மகேல கடும் கண்டனம்



**கொழும்பு, ஜூன் 19**
**2011ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியாவுட னான இறுதிப் போட்டியில், பணத்துக்காக கிண்ணம் தாரைவார்க்கப்பட்டது என்று முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித் தபோதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்தியாவுடனான இறுதிப் போட்டி யில் கிண்ணத்தை வெற்றிகொள்வ தற்கான தகுதி இலங்கை அணியி டம் காணப்பட்டபோதிலும், பணத் துக்காக அது தாரைவார்க்கப்பட்டது என்பதைப் பொறுப்புடன் கூறு கின்றேன். இந்த விடயம் தொடர்பில் விவாதத்தில் ஈடுபடவும் தயாராக இருக்கின்றேன். இந்த விடயத்தில் வீரர்களை இணைத்துக் கொள்ள வில்லை. ஒரு சில தரப்பினரால் இந்த விடயம் மேற்கொள்ளப்பட்டது. என்றார்.
மஹிந்தானந்த அளுத்கமகேவின் கருத்துக்கு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெய வர்த்தன, 2011ஆம் ஆண்டு உல கக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணிக்குத் தலைமை தாங்கியவரான சங்கக்கார ஆகி யோர் கண்டனத்தைத் தெரிவித்துள் ளனர். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் 237 பேர் இதுவரையில் கைது

## மேலும் சில நபர்கள் கைதாவார்கள் என்கிறார் பொலிஸ் ஊடகப்பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 19
உயிர்த்தஞாயிறு தாக்குதலுடன் தொடர் புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப் படையில் 237 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித் தார் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:
உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர் புடைய விசாரணைகளை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். குறித்த விசாரணைகளுக்கு அமைய மேலும் சில சந்தேகநபர்கள் கைது செய் யப்படவுள்ளனர். தற்போதைய நிலை யில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்ப வம்தொடர்பில் 237 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார். (ம)

# எகிறியது தங்கத்தின் விலை

கொழும்பு, ஜூன் 19
கொரோனாத் தொற்று டன் நாட்டில் தங்கத் தின் விலை அதிகரித் துள்ளது. சந்தையில் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 92 ஆயிரம் ரூபாவாக விற்கப்படு கின்றது.
உலக சந்தையிலும் தங்கத்தின் விலை அதி கரித்துள்ளது. கொரோ னாத் தொற்றுக்கு முன் னர் ஒரு பவுண் தங்கம் உள்நாட்டில் 70 - 75 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டது. (த)

# குடு திலானுக்கு தூக்கு விதிப்பு!

கொழும்பு, ஜூன் 19
'குடு திலான்' என்ற போதைப்பொருள் கடத்தல் காரருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது.
274.68 கிராம் ஹெரோய்னை தம்வசம் வைத் திருந்தமை தொடர்பான குற்றச்சாட்டிற்கே அவ ருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி பத்தரமுல்ல பகுதியில் வைத்து குடுதிலான் கைது செய்யப்பட்டிருந்தார். (எ)



# சீனாவிடம் இருந்து இலங்கைக்கு மற்றொரு கடன்

கொழும்பு, ஜூன் 19
சீனாவின் அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 140 மில்லியன் டொலர் களை இலங்கை கடனாகப் பெற் றுக்கொள்ளவுள்ளது. இதில் இந்த மாதத்துக்குள் 70 மில்லியன் டொலர்கள் இலங்கைக்குக் கிடைக்க வுள்ளது. மீதித்தொகை இந்த வரு டத்துக்குள் இலங்கைக்கு வழங்கப் படும் என்று சீனத் தூதரகம் அறிவித் துள்ளது.
கொரோனா வைரஸ் காரணமாக ஏற்பட்டுள்ள நிதிச் சிக்கலை சமாளிப் பதற்காகவே இந்தக்கடன் பெற்றுக் கொள்ளப்படுவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. கடந்த மே 13ஆம் திகதியன்று சீன ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதியுடன் தொலைபேசியில் கலந்துரையாடியதன் ஒரு கட்டமாகவே இந்த கடன் திட்டம் அமைந்துள்ளது என்று இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ம)

# ஜாலியவுக்கு உயர்பதவி!

கொழும்பு, ஜூன் 19
பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் ஜாலிய சேனாரத்ன சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகராக பதவி உயர்த் தப்பட்டுள்ளார். தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேசிய தேர்தல் கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டுள் ளது என்று பொலிஸ் தலைமையகம் அறிவித் துள்ளது.
பொலிஸ் பொதுமக்கள் இணைப்புப்பிரிவின்பணிப் பாளராகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் ஜாலிய சேனாரத்ன கட மையாற்றுகிறார். (எ)

# அபராதம் செலுத்தும் காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19
பொலிஸாரால் கடந்த பெப்ரவாரி மாதம் 16ஆம் திகதிக்கு பின் னர் வழங்கப்பட்ட அப ராதங்களைச் செலுத்து வதற்காக வழங்கப்பட்ட சலுகைக் காலம் எதிர்வ ரும் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது.
இந்த அபராதங்களை நாடு முழுவதும் உள்ள அஞ்சல் நிலையங்க ளில் மற்றும் உப தபால் நிலையங்களில்செலுத்த முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (எ)

# இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
நெடுந்தீவு நடுக்குறிச்சி பெருக்கடி சிறி சித்தி விநா யகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பாக வுள்ளது. 10 தினங்கள் நடைபெறும் இந்த உற்ச வத்தில் 27ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திரு விழாவும், 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெ றும். இந்த வருடம் ஜன வரியில் மகா கும்பாபி சேகம் நடைபெற்ற பின் னர் நடைபெறும் வரு டாந்த உற்சவம் இதுவா கும். (ம)

# பொதுஜன பெரமுன ஆட்சியமைக்க சிறுபான்மையினர் வாக்களிப்பராம்

கொழும்பு, ஜூன் 19

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் ஆதரவு வழங்கவில்லை. ஆனால் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணி பலமான அரசை அமைப்பதற்கு சிறுபான்மையினர் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சிக்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்புக் கூறவேண்டும். அரசியல் ரீதியில் முன்னேற வேண்டும் என்ற சுய நோக்கத்தால் பழமை வாய்ந்த கட்சியை இவர் இல்லாதொழித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் பொதுத்தேர்தலை தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து கொள்வார்கள். நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பொதுமக்கள் முன்னணி அனைத்து இன மக்களின் ஆதரவையும் பெறும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஆதரவு வழங்கவில்லை. ஆனால் ஜனாதிபதி அனைத்து இன மக்களின் தலைவராகவே செயற்படுகிறார். அரசின் செயற்பாடுகள் தமிழ், முஸ்லிம் மக்களை வேறுபடுத்தவில்லை. நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பொதுமக்கள் முன்னணிக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் பெருமளவில் ஆதரவு வழங்குவார்கள்.
கொத்மலை தேர்தல் தொகுதியில் 7 ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்கள் உள்ளார்கள். அவர்களில் 5ஆயிரம் வாக்குகள் பொதுமக்கள் முன்னணிக்கு கிடைக்கப்பெறும்.

அத்துடன் நுவரெலியா தேர்தல் தொகுதியில் 23 ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்கள் உள்ளார்கள். அவர்களில் 12 ஆயிரம் வாக்குகள் எமக்கு கிடைக்கும்.
தமிழ், முஸ்லிம் மக்கள் அரசியல் ரீதியில் மாற்றமடைந்து வருகிறார்கள். நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் முன்னணி நுவரெலியா மாவட்டத்தில் 13 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்த வெற்றிடம் பொதுத்தேர்தலில் பூர்த்தி செய்யப்படும். இந்தமுறை நுவரெலியா மாவட்டத்தில் அதிகூடிய வாக்கு வித்தியாசத்தில் என்னால் வெற்றி பெற முடியும் - என்றார். (ப)

## போதைப்பொருள் குற்றங்கள்:
# கடந்த 7 மாதங்களில் 44 ஆயிரம் பேர் கைது

நாட்டில் கடந்த 7 மாதங்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் சுமார் 44 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
இத்தகைய குற்றங்களைக் குறைப்பதற்கு உரியசட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுவருவதாகவும் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் குற்றச்செயல் களைக் கட்டுப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது.
அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சைபர் இணையவழிக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்குரிய பொறுப்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு இருக்கிறது. குற்றப்புலனாய்வுப் பிரிவில் கணினியுடன் தொடர்புடைய குற்றச்செயல்களை ஆராய்வதற்குத் தற்போது சகல நவீன வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.
அது மட்டுமன்றி இவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நன்கு பயிற்றப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
ஆரம்பத்தில் கொழும்பில் மாத்திரமே சைபர் இணையவழிக் குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடளிக்கக்கூடிய வசதி காணப்பட்டது. தற்போது அதற்கு மேலதிகமாக பலாங்கொடை மற்றும் மாத்தளை ஆகிய இடங்களில் குற்றப்புலனாய்வுப் பிரிவின் இரண்டு கிளைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
அங்கும் இதுபற்றிய முறைப்பாடுகளைச் செய்ய முடியும். இவற்றுக்கு மேலாக கணினியுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் பற்றிய சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.
கடந்த 7 மாதங்களில் ஹெரோய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கடத்தல் குற்றச் செயல்களில் ஈடுபட்டனரென சுமார் 44 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சுமார் 8 ஆயிரம் கிலோகிராம் பெறுமதியான ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளை அவர்களின் உறவினர்கள் பார்வையிட வரும்போது குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய பொருள்கள் பரிமாறப்படும் வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன. எனவே சிறைக்கைதிகளைப் பார்வையிடுவது தொடர்பிலும் வரையறைகளை இறுக்கமாக்குவது பற்றி கலந்துரையாடல் நடக்கின்றன- என்றார். (ஐ)

# ஐ.தே.கவின் கோட்டையான கொழும்பை வெற்றி கொள்வோம்

## அந்தக் கட்சியின் வேட்பாளர் நம்பிக்கையுடன் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 19
மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோரை அரசியலில் வளர்த்து விட்டது ஐக்கிய தேசியக் கட்சி. அதனை மறந்து அவர்கள் சம்பிக்க என்ற இனவாத கூடத்தில் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சண் குகவரதன் தெரிவித்தார்.
எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு கோட்டையை ஐ.தே.கவே வெற்றிகொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொழும்பு மாவட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை. இந்தமுறை பொதுத்தேர்தலின்போது ஐ.தே.க. அதனை தக்கவைத்துக் கொள்ளும்.
சிறுபான்மை மக்கள் தொடர்பில் உண்மையான அக்கறையுடன் செயற்பட்டு வரும் ஐ.தே.க. பல தடவை அதனை உறுதிப்படுத்தியும் உள்ளது.
நல்லாட்சி அரசின்போது மனோகணேசன் அமைச்சராகப் பதவி வகித்தார். இதன்போது வத்தளை மற்றும் மத்துகம ஆகிய பிரதேசங்களில் தமிழ் பாடசாலைகளை அமைத்துக் கொடுப்பதாக உறுதியளித்திருந்தார் எனினும், அது எதுவுமே நிறைவேற்றப்படவில்லை.
ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தூர நோக்குச் சிந்தனையுடன் செயற்படுபவர். உபதலைவர் ரவி கருணாநாயக்க சிறுபான்மை மக்களின் நலன் தொடர்பில் அக்கறையுடன் செயற்படுபவர். இந்தநிலையில் சிறுபான்மை மக்கள் தொடர்பில் ஐ.தே.கவே எப்போதும் அக்கறையுடன் செயற்படும். யார் கட்சியை விட்டு விலகினாலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு கோட்டையை ஐ.தே.கவே வெற்றி கொள்ளும். சம்பிக்க என்ற இனவாத கூட்டத்திலே உறுப்புரிமைபெற்று அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மனோ கணேசன் இந்தமுறை படுதோல்வியடைவார்.-என்றார். (ப)

# குணமடைந்தவருக்கு மீண்டும் தொற்று ஏற்பட்டாலும் பரவாது

## பிரதிப்பணிப்பாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 19
கொரோன வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகி குணமடைவோருக்கு மீண்டும் தொற்று ஏற்பட்டாலும் அது ஏனையோருக்கு பரவாது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் பலிக வர்தன தெரிவித்துள்ளார்.
அநுராதபுரத்தில் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெற்ற பெண் ஒருவருக்கு மீண்டும் தொற்றுக்கான அறிகுறி தோன்றியமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தொற்றுக்கு சிகிச்சைபெற்று குணமான ஒருவருக்கு மீண்டும் தொற்று ஏற்படுமானால், அது இறந்த வைரஸின் வெளிப்பாடாகவே இருக்கும். எனவே அது ஏனையவர்களுக்குப் பரவாது என்று அவர் தெரிவித்துள்ளார். (க)

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு கடன்

## 150 பில்லியன் ரூபாவை ஒதுக்குகிறது மத்திய வங்கி

அங்குலானை, ஜூன் 19
கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு உதவுவதற்காக 150 பில்லியன் ரூபாவைக் கடனாக வழங்க இலங்கை மத்திய வங்கி முன்வந்துள்ளது.
இந்தத் திட்டத்தின் அடிப்படையில் அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கி ஒரு வீத வருடாந்த வட்டியில் கடன் வழங்கத் தீர்மானித்துள்ளது.
பாதிக்கப்பட்ட உள்நாட்டு நிறுவனங்களுக்கு, உள்நாட்டு வர்த்தக வங்கிகள் 4 சதவீத வருடாந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஐ-ரி2)

# வசதியற்ற குடும்பங்களுக்கு மின் உற்பத்திக் கருவிகள்

கொழும்பு,ஜூன் 19
குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சூரிய சக்தியிலான மின் உற்பத்திக் கருவிகளை இலவசமாகப் பெற்றுக்கொடுக்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
நாட்டில் குறைந்த வருமானம் பெறும் மின்சார வசதியில்லாத 12 ஆயிரத்து 500 குடும்பங்கள் உள்ளன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அது வேறு, இது வேறு

ஜனாதிபதித் தேர்தலில் நாம் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளை நம்பியிருக்கவில்லை. அதே போன்று நாடாளுமன்றத் தேர்தலிலும் சிறுபான்மையினரின் வாக்குகளுக்காக கையேந்த மாட்டோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ சில நாட்களின் முன்னர் கூறியிருந்தார். இப்படி இன ரீதியிலான வன்மத்தோடு கருத்துச் சொல்வது அவருக்கு ஒன்றும் புதிதல்ல. அவர் நாக்கிலேயே இனவாத விஷம் கொண்டவர். அதனால்தான் அவரை விமல் வீரவன்ஸ என்பதைவிட விஷ வீரவன்ஸ என்று தமிழர்கள் 'செல்லமாக' அழைப்பார்கள்.

வழக்கம் போல தேர்தல் வந்துவிட்டால் விமலுக்கும் இனவாத விஷம் தலைக்கேறிவிடும், இம்முறையும் அப்படி இனவாத விஷம் தலைக்கேறியதாலேயே, சிறுபான்மையினரின் வாக்குகள் தமக்கு தேவையில்லை என்று வீராப்பு பேசியுள்ளார். உண்மையில் ஜே.வி.பியில் இருந்து பிரிந்து வந்த விமல் வீரவன்ஸ தேசிய சுதந்திர முன்னணி என்று தனிக்கட்சி வைத்திருந்தாலும் எந்தவொரு தேர்தலிலும் தனித்துப் போட்டியிட்டதில்லை. எப்போதும் அவர் ராஜபக்ஷக்களின் நிழலாக அவர்களோடு ஒட்டிக்கொண்டிருந்து, அவர்களுக்கு விழும் வாக்குகளின் தயவிலேயே நாடாளுமன்ற உறுப்பினரானவர். அப்படி இன்னொரு கட்சியின் வாக்குகளின் தயவில் நாடாளுமன்றத்துக்கு வந்தவர்தான் இப்போது சிறுபான்மையினரின் வாக்குகள் தேவையில்லை என்று மொட்டுக் கட்சியின் பங்காளி என்ற ரீதியில் எகத்தாளமாகக் கருத்துக்களைத் தெறிக்கவிட்டார்.

ஆனால், இப்படி இனவாத வாக்குகளுக்கான தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் வாக்குகள் தேவையே இல்லை என்று சொல்வது, மூன்றில் இரண்டு பெரும்பான்மைக் கனவுக்கு ஆப்பாக அமைந்துவிடும் என்பது மஹிந்தவுக்கு நன்கு தெரியும். அதனாலேயே பதறியடித்துக்கொண்டு தம் பங்காளிக்கட்சித் தலைவர்களை அழைத்து, 'இனிமேல் தமிழ், முஸ்லிம் வாக்குகள் எமக்கு அவசியமில்லை என்று பொறுப்பற்ற கருத்துக்களைக் கூறவேண்டாம். அப்படிச் சொல்வதால் நமக்குக் கிடைத்து வந்த சிறுபான்மையினரின் வாக்கும் கிடைக்காமல் போய்விடும்' என்று வாய்ப்பூட்டு போட்டுள்ளார். ஏனெனில் மஹிந்த சூடுகண்ட பூனை. சிறுபான்மையினரின் வாக்குகள்தான், அசைக்கவே முடியாதென்று நம்பப்பட்ட அவரது ஆட்சிக்கு ஆப்பு வைத்தன. அதிலிருந்து மீண்டெழ 5 வருடங்கள் ராஜபக்ஷக்களுக்குத் தேவைப்பட்டன. இனிமேலும் அப்படியான நிலை வந்தால், மீண்டெழுவது அவ்வளவு சுலபமல்ல. அதனாலேயே பக்குவமாகக் காய்நகர்த்த ராஜபக்ஷக்கள் நினைக்கிறார்கள். ஆனால்கூட இருப்பவர்களோ இந்த யுக்தியை விளங்கிக் கொள்ளாமல், கோத்தாபய தனிச் சிங்கள வாக்குகளால் வென்றதால், சிறுபான்மையினரின் வாக்குகள் இல்லாமலே பெருவெற்றியை அடையலாம் என்ற ரீதியில் கணக்குப் போட்டு, இனவாத வாக்குகளை மட்டும் குறிவைத்து கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

ஆனால் ஜனாதிபதித்தேர்தலுக்கான இனவாதயுக்தி, நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்லுபடியாகாது. அது வேறுவகையிலான தெரிவு. இது வேறுவகையிலான தெரிவு. உதாரணமாக கிரிக்கெட்டில் டெஸ்ட் போட்டியில் அபாரமாக விளையாடக்கூடிய ஒருவர், ரி20 போட்டியில் பிரகாசிக்க முடியாமல் போகலாம். ஏனெனில் டெஸ்ட் போட்டியில் நிதான ஆட்டமும், ரி20 போட்டியில் அதிரடி ஆட்டமுமே வீரர்களுக்கு கைகொடுக்கக்கூடியவை. இரண்டுமே வேறு வேறு வகையிலான தன்மை கொண்டவை. ஆனால் அடிப்படையில் இரண்டுமே கிரிக்கெட்தான்.

அதைப்போலவே ஜனாதிபதித் தேர்தலின் போது கைக்கொள்ளப்பட்ட இனவாதப் பொறிமுறை, நாடாளுமன்றத் தேர்தலில் செல்லாக்காசாகவும் மாறலாம். எனவேதான் மஹிந்த மீண்டும் ஒருமுறை சிறுபான்மை வாக்குகளால் தங்களுடைய ஆட்சியின் நீட்சி முடிவுக்கு வந்துவிடுமோ என்று அஞ்சுகிறார். சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுக்காமல் இருந்தாலே போதும் என்ற நிலையிலேயே அவர் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு, குறிப்பாக விமல் வீரவன்ஸவுக்கு கடுமையாக அறிவுறுத்தியுள்ளார். ஆனால் விமலின் வாயை மூடினாலும், அவர் போன்ற ஏனைய இனவாதிகள் மீண்டும் இனவாதக் கோஷத்தை முன்னெடுக்கத்தான் போகிறார்கள். அதில் மாற்றமிருக்காது. இருப்பினும் மஹிந்தவின் அறிவுரையையும் மீறி விமல் வீரவன்ஸவோ அல்லது ஏனைய மொட்டுக்கட்சியினரோ இனவாத விஷத்தைக் கக்குவார்களாக இருந்தால் அதன் அறுவடையை அவர்களே பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும்.



# வடமாகாண வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரியுங்கள்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 19



**வடமாகாண வளர்ச்சிக்கான உரிய துறைகள் சார்பில் பொருத்தமான கொள்கைத் திட்டங்களைத் தாமதமின்றித் தயாரிக்குமாறு வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.**

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் மாகாண அமைச்சுகளின் செயல்பாடுகள் தொடர்பான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் ஆளுநர் செயலகத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆளுநரின் செயலாளர்கள், பிரதம செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### முன்னாள் செயலருக்கு இரங்கல்

கூட்டத்தின் ஆரம்பத்தில், காலஞ்சென்ற வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் ரங்கராஜாவின் ஆன்மா சாந்திக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ஒரு சிறந்த மனிதரையும், அறிவாளியையும் நமது சமூகம் இழந்துள்ளது என்று தனது இரங்கலுரையில் ஆளுநர் தெரிவித்தார்.

### கொரோனா இல்லை

வடக்கில் கொரோனாத் தொற்று மற்றும் பரவலைத்தடுக்கும் பாதுகாப்பு முறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. மாகாணத்தில் தற்போது ஒருவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை. அனைத்து விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சுகாதாரத்துறை அமைச்சின் செயலாளர் ஆளுநரிடம் தெரிவித்தார்.

### திட்டங்களைத் தயாரியுங்கள்

தொடர்ந்து துறைசார் மாகாண கொள்கைகள் தயாரித்தல் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது. அங்கு ஆளுநர் தெரிவித்ததாவது,

தேசிய கொள்கைகளிலிருந்து விலகாமல் வட மாகாண வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் அனைத்து மாகாண அமைச்சுக்களும் துறைசார் கொள்கைகளை உருவாக்க வேண்டும். அதனடிப்படையிலேயே துறைசார் அமைச்சரவை அறிக்கையையும் தயார் செய்ய வேண்டும்.

இதனைவிடவும், மாகாணத்திலுள்ள பண்ணைகளை மேம்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். கைவிடப்பட்ட நிலங்களை ஆர்வமுள்ள விவசாயிகளுக்குத் தற்காலிகமாக விவசாயம் செய்வதற்கு மட்டுமாக உரிய பிரதேச செயலகங்க்ள் ஊடாக கையளிக்க வேண்டும், மேய்ச்சல் நிலங்களையும், அதற்கான எல்லையையும் உருவாக்க வேண்டும்.

உள்நாட்டு மீன்வளத்தை அதற்குத் தொடர்புடைய ஏனைய துறைகளோடு ஒன்றிணைத்து விரிவடையச் செய்ய வேண்டும்,

பெண் தலைமைத்துவ மற்றும் வறுமைக்கோட்டுக்குக் கீழே காணப்படும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும், பாடசாலைகளுக்குத் தேவையான தளபாட வசதிகளைச் சீர்செய்ய வேண்டும், முறையான துறைசார் பணி இடமாற்றக் கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குத் தகுந்த உணவு, மருந்து விநியோகம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் ஆகியவற்றை உரிய முறையில் உடனடியாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும், செயற்கைக் கருத்தரிப்பு மருத்துவமனையொன்று மாகாணத்தில் அமைக்க திட்டமிடலாம் என்று ஆளுநர் தெரிவித்தார்.

### நவீன தொழில்நுட்ப விவசாயம்

ஒரு தனியார் வேளாண் நிறுவனத்தின் உதவியுடன் விவசாயத்தை இந்தக் கால தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரிவாக்கவும், விளைபொருள்களுக்கான சந்தைப்படுத்துதலை ஏற்படுத்தவும் கூடிய ஒத்திகைத் திட்டம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டத்துக்கான உத்திகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக, மாகாண வளர்ச்சிக்குத் தேவையான பயிர்களைப் பயிரிடவும் அதற்கான சந்தையை உருவாக்க வேண்டுமென ஆளுநர் தெரிவித்தார்.

மாகாணத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் விரைந்து முன்னெடுக்குமாறும் அதற்குத் தன்னாலான அனைத்து உதவிகளையும் உரிய மாகாண மற்றும் மத்திய அமைச்சுக்களிடமிருந்து பெற்றுத்தருவதாகவும் ஆளுநர் உறுதிமொழி அளித்தார். (க)

# பார்வைக்குறைபாடுடைய வறியோருக்கு கண்ணாடி

தெல்லிப்பழை, ஜூன் 19

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களில், பார்வைக் குறைபாடுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் அவை நேற்று முன் தினம் வழங்கப்பட்டன. (கு-9)



### புத்தளம் வாழ் மன்னார் மக்களுக்கு

# ரூ.5,000 கொடுப்பனவுக்காக வங்கிக்கணக்குகள் ஆரம்பிப்பு

**மன்னார்,ஜூன் 19**

**புத்தளத்தில் வசிக்கும் மன்னார் மாவட்ட மக்களுக்கு கொவிட் பாதிப்பு நிவாரணம் வழங்கும் செயற்றிட்டத்துக்கு புதிதாக வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**



மன்னார் மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டு 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்த ளத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் கொவிட் 19 தொற்றால் நடை முறையில் இருந்த ஊரடங்குக் காலத்தில் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா நிவாரண நிதி தங்களுக்கும் வழங் கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 771 குடும்பங்களுக்கு குறித்த நிதி வழங்கும் வகையில் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட மேலதிக செயலாளர் குணபாலன் தலைமையில் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

வங்கி கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் அடுத்த வாரம் வைப்புச் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

## முன்மாதிரியான செயற்பாடு பெண் ஆசிரியருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம்,ஜூன் 19

யாழ்ப்பாணம், முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று காலப்பகுதியில் செயற்பட்ட விதம் சம்பந்தமாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். திருமதி சரஸ்வதி சண்முகதாஸ் என்பவரே பாராட்டைப் பெற்றுள்ளார்.

அவர், தான் கற்பிக்கும் குறித்த பாடசாலையின் மாணவர்கள் அனைவருக்கும் செயலட்டைகளை தயாரித்து வழங்கி அவற்றைப் பெற்று திருத்தி வழங்கியிருந்தார்.

கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற வலயமட்ட பரீட்சையில் மாண வர்களை பங்குபற்றச் செய்து கடந்த 10 ஆம் திகதி அவற்றை மீளத் திருத்தி வழங்கியுள்ளார்.

அடிப்படை வசதிகள் குறைவான குறித்த பாடசாலையில் மாண வர்களை ஊக்குவித்து செயற்பட்ட இவருடைய செயற்பாட்டை கல்விச் சமூகம் பாராட்ட வேண்டும் என்பதுடன், ஏனைய ஆசிரியர்களுக்கு இது ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார். (த-ந)

## ஈரான் தூதுவர்-மஹிந்த சந்திப்பு



கொழும்பு, ஜூன் 19

ஈரானுக்கும், இலங்கைக்குமான நல்லுறவை மேலும் பலப்படுத்துவதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், இலங்கைக்கான ஈரான் தூதுவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையுடனான உறவை தொடர்ந்து பலப்படுத்த தாம் விருப்பம் கொள்வதாக ஈரான் நாட்டு தூதுவர் பிரதமரிடம் தெரிவித்தார்.

ஈரான் நாட்டுக்கான இலங்கை தூதுவர் ஹசீம் ஹஸ்ஜஷாடுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்த சந்திப்பு குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இரு நாடுகளுக்கும் வரலாற்றுக் காலம் தொடக்கம் காணப்படும் நல்லுறவை மேலும் பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது இரு தரப்பிலும் கலந்துரையாடப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவு 1962ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக்கான ஈரான் நாட்டு தூதரகம் கொழும்பில் 1975ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஈரான் நாட்டில் டெஹ்ரானின் இலங்கைத் தூதரக காரியாலயம் 1990ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இரு நாடுகளுக்கு இடையிலான நல்லுறவை தொடர்ந்து பலப்படுத்த தாம் விருப்பம் கொள்வதாக இலங்கைக்கான ஈரானிய தூதுவர் பிரதமரிடம் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து ஈரானுக்கு 150 தொடக்கம் 200 மில்லியன் டொலர் பெறுமதியான உற்பத்திகள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன. மத்திய கிழக்கு நாடுகளின் ஏற்றுமதி நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கைக்கும், ஈரானுக்கும் இடையிலான ஏற்றுமதி நடவடிக்கைகளில் 90 சதவீதமானவை தேயிலை தொழிற்துறை சார் உற்பத்திகளாகும்.- என்றுள்ளது. (ஐ)

## ஆரோக்கிய தேசத்துக்காக கவனத்துடன் உண்போம்' மாணவர்களுக்கு சித்திரப்போட்டி

'ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க கவனத்துடன் உண்போம்' எனும் தொனிப்பொருளில் இலங்கை போசணையாளர் சங்கம் கல்வி அமைச்சுடன் இணைந்து சித்திரப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

போசனை மனித வாழ்வில் இன்றியமையாதது. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களிடையே 'ஆரோக்கியமான வாழ்க்கைக்கு கவனத்துடன் உண்ண வேண்டும்' என்பதை உணர வைக்கும் நோக்குடனேயே நடத்தப்படவுள்ளது.

இது பாடசாலை மாணவர்களிடையே வகை 1 : தரம் 1 5, வகை 2 : தரம் 6 9, வகை 3 : தரம் 10 13 ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

போட்டியில் முதலாம் பரிசு 6 ஆயிரம் ரூபா. 2ஆம் பரிசு 4ஆயிரத்து 500 ரூபா, 3ஆம் பரிசு 3ஆயிரத்து 500 ரூபா மற்றும் 10 சாதாரண பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வெற்றிபெற்ற ஓவியம் இலங்கை போசணையாளர் சங்கத்தினதும், கல்வி அமைச்சினதும் வலைத்தளம் மற்றும் அவற்றின் பதிப்புகளிலும் பிரசுரிக்கப்படும்.

ஓவியங்கள் A3 அளவு தாள்களில் வரையப்படவேண்டும். அனுமதிக்கப்பட்ட வரைய பாவிக்கக்கூடிய பொருள்களாவன பஸ்டல், நீர் வர்ணங்கள் , சுவரொட்டி நிற வண்ணங்கள் மற்றும் எண்ணெய் வர்ணங்கள்.

டிஜிட்டல் ஓவியங்கள் மற்றும் படத்தொகுப்பு ஓவியங்கள் அனுமதிக்கப்படமாட்டா. சகல ஓவியங்களும் 'ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க கவனத்துடன் உண்போம்' என்ற தொனிப்பொருளில் இருக்க வேண்டும்.

ஓவியத்தின் பின்புறத்தில் பின்வரும் விவரங்கள் காணப்பட வேண்டும் உங்கள் ஓவியத்துக்கான தலைப்பு, முழுப்பெயர், பிறந்த திகதி, வயது, உங்கள் வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், வகை, பாடசாலை மற்றும் தரம், உங்களுடையவை என்பதை உறுதிப்படுத்த பெற்றோர் / பாதுகாவலர் / வகுப்பு ஆசிரியர்/பாடசாலை அதிபரின் கையொப்பம்.

தரமான போட்டோவாகவோ அல்லது ஸ்கேன் பிரதியாகவோ உங்கள் ஓவியத்தையும் ஓவியத்தின் பின்புறத்தையும் 2020 ஆடி மாதம் 30ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் sl.nutritionsociety@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

மேலதிக விவரங்களுக்கு ஹசங்கா ரத்னாயக்க ( 071 8154005 / 0779120130) என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-37)

## மாத்தளனில் வெடிபொருள் வயர் மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு புதுமாத்தளனில் வாடி ஒன்றிலிருந்து வெடிபொருள் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

18 அடி நீளம் கொண்ட (டெக் கோல்) எனப்படும் சட்டவிரோத வெடிபொருள்களுடன் பயன்படுத்தப்படும் ஒருவகை வயர்தான் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை வைத்திருந்த மீனவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-19)



## இந்தியக் கடற்படையினர் இலங்கை வருகை

கொழும்பு, ஜூன் 19

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ள கப்பலில் பணியாற்றுவதற்காக 54 இந்திய கடற்படையினர் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தனர்.

இண்டிகோ விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்றில் மும்பையில் இருந்து இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதேநேரம் குறித்த விமானத்தில் இருந்த 15 பயணிகள் மற்றுமொரு விமானம் மூலம் கட்டாருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என வும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கொக்குவிலில் நாளை குருதிக்கொடை

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை குருதிக்கொடை நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பஞ்சலிங்கம் மண்டபத்தில் இது நடைபெறவுள்ளது.

தற்கால சூழ்நிலையை கருத்திற்கொண்டு தன்னார்வ குருதிக்கொடையாளர்கள் சகலரையும் குருதிக்கொடை வழங்குமாறு அழைக்கப்படுகின்றனர். (த-222)

# நிதிக் கம்பனிகளை கட்டுப்படுத்த திட்டம் உருவாக்கப்படவேண்டும்

*கரு ஜயசூரிய வலியுறுத்து*



**கொழும்பு, ஜூன் 19**

**நாடளாவிய ரீதியில் இயங்கும் அனைத்து நிதிக் கம்பனிகளும் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் உரிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கும் வகையிலான திட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் வறிய மற்றும் கல்வி அறிவற்ற மக்கள் நிதிக் கம்பனிகளால் ஏமாற்றப்படுவதைத் தவிர்க்க முடியாது என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.**

அவர் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் பின்தங்கிய, வறிய பிரதேசங்களில் பதிவு செய்யப்படாத நிதிக் கம்பனிகள் தமது மிக மோசமான இரக்கமற்ற செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்றன. உண்மையில் சில நிதிக் கம்பனிகளே மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. ஏனைய கம்பனிகள் தமது தேவைகளுக்கு வறிய மற்றும் கல்வி அறிவற்ற மக்களை இரையாக்குகின்றன. அந்தக் கம்பனிகள் அனைத்தும் உரிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படக் கூடியவாறான கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தற்போது மிக அவசியமானதாகும். கொவிட் 19 வைரஸ் பரவலைத் தொடர்ந்து பங்குச்சந்தையானது பெரும் எண்ணிக்கையான பெரிய மற்றும் சிறிய முதலீட்டாளர்களை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த அச்சுறுத்தல் நிலை தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்வதை விடவும், அவற்றை விற்பனை செய்வதில் நாட்டம் காண்பிக்குமளவுக்கு அதிகரித்திருக்கிறது- என்றார். (ஏ)

## ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்பேற்கமாட்டேன்

*மைத்திரி விடாப்பிடி*

கொழும்பு, ஜூன் 19

ஈஸ்டர் தாக்குதலுக்கான பொறுப்பை நான் ஏற்க முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார். நேர்காணலில் ஈஸ்டர் தாக்குதல் குறித்து கேள்வியெழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறான தாக்குதலொன்று நடைபெறப் போகின்றது என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அதனால் அதற்கான பொறுப்பை ஏற்கப் போவதில்லை. ஈஸ்டர் தாக்குதல் குறித்து முன்பே தெரிந்திருந்தால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பேன் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார். (க)

## ஜூன் மாத ஓய்வூதியம் 22 முதல் தபாலகங்களில்

கொழும்பு,ஜூன் 19

விவசாய மற்றும் மீன்பிடி ஓய்வூதியம் பெறுபவர்கள் ஜுன் மாதத்துக்கான ஓய்வூதியத்தை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் தங்களுக்கான அஞ்சலகங்களில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

அதற்கமைவாக ஓய்வூதியத்துக்கான நிதியை எதிர்வரும் 20 ஆம் திகதியாகும் போது, நாட்டிலுள்ள அனைத்து அஞ்சலகங்களுக்கும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைவர் சட்டத்தரணி பிரேமசந்திர ஏபா தெரிவித்துள்ளார். (க)

## நெல் கொள்வனவுக்கு தயாராகும் ஆலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் அரிசி ஆலைகள் சிறுபோகத்துக்கான நெல்லைக் கொள்வனவு செய்வதற்குத் தயாராகி வருகின்றன. சிறுபோகத்தின்போது அறுவடை செய்யப்படும் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு அரிசி ஆலைகளின் கூட்டுறவு சங்கங்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றன. ஏற்கனவே பெரும்போக நெற்செய்கை அறுவடையின்போது அநேகமான கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்தன. இந்த நெல் கொள்வனவு செய்யப்பட்டு அரிசி ஆலைகள் ஊடாக அரிசி ஆக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

கடந்த பெரும்போகத்துக்கான இந்த நெல்கொள்வனவுக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் கூட்டுறவு நிதியிலிருந்து கடன் அடிப்படையில் நிதியைச் சங்கங்களுக்கு வழங்கி இருந்தன. (த-17)

## எம்.சி.சிக்கு எதிராக விஜேதாச போர்க்கொடி!

கொழும்பு, ஜூன் 19

மீளாய்வு செய்யப்படாமல் முன்வைக்கப்படும் எம்.சி.சி. உடன்படிக்கைக்கு நான் ஒருபோதும் ஆதரவை வழங்கமாட்டேன். கடும் எதிர்ப்பை வெளியிடுவேன் என்று ஜனாதிபதி சட்டத்தரணியும், ஆளுங்கட்சி உறுப்பினருமான விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது முன்வைக்கப்பட்ட எம்.சி.சி. உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் எனக்கு தெரியும். அதற்கு நான் கடும் எதிர்ப்பை வெளியிட்டேன். அத்தகைய உடன்படிக்கையை எந்தவொரு ஆட்சியிலும் ஏற்கமுடியாது.

எனினும், தற்போது புதியதொரு உடன்படிக்கை தொடர்பில் அமெரிக்க தூதுவர் கருத்து வெளியிட்டுள்ளார். அந்த உடன்படிக்கையும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின்போது முன்வைக்கப்பட்ட உடன்படிக்கைபோல் அமைந்தால் அதற்கும் நான் கடும் எதிர்ப்பை வெளியிடுவேன்.

இரு நாடுகளினதும் பாதுகாப்பு முக்கியம். எனவே, நாட்டுக்கு பாககதமான எந்தவொரு உடன்படிக்கையையும் ஜனாதிபதி ஏற்கமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது-என்றார்.

அதேவேளை, நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மொட்டு அணி மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (எ-44)

## பொருத்தமற்றவர்களிடம் சிக்கித் தவிக்கிறது நாடு

*தினசிறி தலகே ஆதங்கம்*

கொழும்பு,ஜூன் 19

சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் பல்வேறு ஜனநாயக முறைமைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியே அறிமுகம் செய்தது. எனினும் தற்போது பொருத்தமற்றவர்களின் கைகளில் நாடு இருப்பதோடு, தன்னிச்சையான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுத்தேர்தல் வேட்பாளர் தினசிறி தலகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒற்றுமையைச் சீர்குலைத்தவர்களே இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளனர்.

தேர்தலில் வெற்றியடைந்த பின்னர் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் கூறுவதிலிருந்து, ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் காணப்பட்ட ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிக்கு அவர்கள் பலியாகின் றமை வெளிப்படுகின்றது.

ஜனநாயக நாடொன்றில் ஒரு விடயம் குறித்து தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் கலந்துரையாடியே தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் தற்போது தனியொருவர் மாத்திரம் தீர்மானம் மேற்கொள்ளும் நிலை உருவாகியிருக்கிறது.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் பல்வேறு ஜனநாயக முறைமைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியே அறிமுகம் செய்தது. எனினும் தற்போது பொருத்தமற்றவர்களின் கைகளில் நாடு இருப்பதோடு, தன்னிச்சையான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அடுத்ததாக தேர்தலில் வெற்றியடைந்த பின்னர் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படத்தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் கூறுகின்றனர்.

ஏதேனுமொரு கொள்கையில் உடன்படுவதில் தவறில்லை. ஆனால் எந்தவொரு நிபந்தனைகளுமின்றி இவ்வாறு இணைந்து செயற்படுவதென்பது ஜனநாயகத்தையே பாதிக்கும். ஆக, ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்கு ஏதோவொரு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் பலியாகிவிட்டார்கள் என்பது தெளிவாகின்றது- என்றார். (க)



## தேயிலை ஏற்றுமதி வரி 6 மாதங்களுக்கு நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 19


தேயிலை ஏற்றுமதியின் போது அறவிடப்படும் 3.50 ரூபா வரியை 6 மாதங்களுக்கு இடைநிறுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ தேயிலைக்கு 3.50 ரூபா வரி அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# பேரினவாதிகளின் அடிவருடிகளுக்கு தமிழர் தக்க பாடம் கற்பிப்பார்கள்!

## விமல் வீரவன்ஸவின் விஷமப் பேச்சுக்கு முன்னாள் எம்.பி சரவணபவன் பதிலடி



யாழ்ப்பாணம், ஜூன் 19

**தமிழர்களின் வாக்குகள் தேவையில்லை என்றால் வடக்கு – கிழக்கு என தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் பொது மக்கள் முன்னணி ஏன் வேட்பாளர்களை நிறுத்துகின்றது இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.**

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ அண்மையில், 'தமிழர்கள் முஸ்லிம்களின் வாக்குகளுக்காக நாங்கள் கெஞ்சப்போவதில்லை' என்று தெரிவித்திருந்தார். இதற்கு விடுத்த கண்டன அறிக்கையிலேயே சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழர்களின் வாக்குகளுக்காக கெஞ்சப்போவதில்லை என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். அவ்வாறிருக்கையில் பொதுமக்கள் முன்னணியினர் வடக்கு - கிழக்கில் எதற்காக மொட்டு சின்னத்தில் வேட்பாளர்களை களமிறக்குகின்றனர். சிறுபான்மை மக்களின் வாக்குகளுக்காகக் கெஞ்சப்போவதில்லை என்று தெரிவிக்கும் இவர்கள் தான் தமிழர் தாயகங்களில் வேட்பாளர்களையும் களமிறக்கியுள்ளனர். இவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் மிகப்பெரிய முரண்பாடு உள்ளது. போலித்தனமான அரசியலை இவர்கள் முன்னெடுக்கின்றனர். இலங்கை அரசியலில் ஆட்சியமைப்புக்களும் ஆட்சி மாற்றங்களும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளால் நிகழ்ந்துள்ளன என்பதற்கு எண்ணற்ற உதாரணங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

1960ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியமைக்க தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்றார். 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைப்பதற்காக தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்றது. 2005ஆம் ஆண்டில் தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்ததால் மஹிந்த சிம்மாசனம் ஏறினார். 2015ஆம் ஆண்டில் அதே தமிழர்களால் அவர் ஆட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். இவ்வாறான பின்னணியில் விமல் வீரவன்ஸ இவ்வாறான வீராப்புப் பேச்சை வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் மக்கள் இவ்வாறான பேரினவாதிகளை மட்டுமல்லாமல் வடக்கு - கிழக்கில் களமிறங்கும் அவர்களின் அடிவருடிகளையும் படுதோல்வியடையச் செய்யவேண்டும் - என்றுள்ளது. (ம)

# டுபாயிலிருந்து 290 பேர் நாட்டுக்கு

கொழும்பு, ஜூன் 19

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல நாடுகளிலும் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் டுபாயில் சிக்கித் தவித்த 290 பேர் விசேட விமானம் மூலம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்குச் சொந்தமான, விசேட விமானம் மூலம் டுபாயிலிருந்தும் 290 பேர் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை குறித்த விமானம், 290 இலங்கையர்களுடன் பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

விமான நிலையத்தில் வந்திறங்கிய அனைவரையும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

# மின்சார கட்டணத்தை தவணையாக செலுத்தலாம்

கொழும்பு, ஜூன் 19

மின் பாவனையாளர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின் கட்டணங்களை பல தவணைகளாகச் செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எந்தவொரு காரணங்களுக்காகவும் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இறுதியாக வழங்கப்பட்ட மின் கட்டண பட்டியல் சரியானது என அதன் தலைவர் விஜித் ஹேரத் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பயன்படுத்தும் அலகுகளின் எண்ணிக்கைக்கு மட்டுமே இது வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுவோருக்கு உயர்பதவி

## நிறுத்தவேண்டும் என்கிறார் முன்னாள் எம்.பி. ஹுனைஸ் பாரூக்



மன்னார், ஜூன் 19

இராணுவத்தில் ஓய்வு பெற்றவர்களை அரசின் உயர் பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர் என படித்த மக்கள் மத்தியில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. குறித்த செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட்டு கல்வியின் தகுதிக்கு ஏற்ப இலங்கையில் அரச சேவையில் உள்ளவர்களைப் பதவிகளுக்கு அமர்த்த வேண்டிய தேவை இந்த அரசிடம் உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த முறை வன்னி மாவட்ட நிலவரத்தை பார்க்கின்ற போது ஐக்கிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வெற்றி பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. வன்னி மாவட்டத்தில் 3 ஆசனங்களை சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியானது பெற்றுக் கொள்ளும். எமது தேர்தல் பிரசார முன்னெடுப்புக்களில் இளைஞர்கள் முன் நின்று செயற்படுகின்றனர். இன்று அரச சேவையில் இருக்கின்றவர்கள் உயர் பதவிக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இராணுவத்தில் ஓய்வு பெற்றவர்கள் அரசின் உயர்பதவிக்கு நியமிக்கப்படுகிறார்கள் எனப் படித்த மக்கள் மத்தியில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. குறித்த செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட்டு கல்வியின் தகுதிக்கு ஏற்ப இலங்கையில் அரச சேவையில் உள்ளவர்களைப் பதவிகளுக்கு அமர்த்த வேண்டிய கட்டாயத் தேவையில் இந்த அரசு இருக்கின்றது. அதனை முன்னெடுக்கவேண்டும்.

வேலை இல்லாத இளைஞர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இவர்களுக்கு அரச தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என்கின்ற உத்தரவாதத்தை மக்களுக்கு வழங்க வேண்டும் - என்றார். (ப)

# 5,000 ரூபா கொடுப்பனவில் இடம்பெற்ற முறைகேடுகள்

## கணக்காய்வுகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 19

கொரோனாத் தொற்றால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குக் காலத்தில் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பிலான கணக்காய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கணக்காய்வாளர் நாயகம் வி.பி.சி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு உரிய முறையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதி கணக்காய்வாளர் நாயகத்தின் கீழ் பிராந்திய மட்டத்தில் கணக்காய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின் முறைகேடுகளைக் கண்டறிய குழு

கொழும்பு, ஜூன் 19

நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டப்ளியு.டி.லஷ்மன் மூவர் அடங்கிய குழுவை நியமித்துள்ளார். ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர இக்குழுவின் தலைவராகச் செயற்படுகின்றமையுடன், இலங்கை மத்திய வங்கியின் சட்டத்துறை பணிப்பாளர் கே.ஜி.பி.சிறிகுமார மற்றும் மத்திய வங்கியின் வங்கி அல்லாத நிதிநிறுவனங்களை முகாமைத்துவம் செய்யும் பிரிவின் பணிப்பாளர் ஜே.பி.கமல்த் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் பினான்ஸ் மற்றும் லீசிங் வழங்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி நிறுவனங்களினால் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றபோது இடம்பெறும் சமூகம் அங்கீகரிக்காத செயற்பாடுகள் மற்றும் இவை எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன என்பது பற்றியும் கண்டறிந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குமாறு குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்குழு அதன் அறிக்கையை14 நாள்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புதிய உறுப்பினர் பதவி ஏற்பு!

மூதூர், ஜூன் 19
மூதூர் பிரதேச சபையின் புதிய உறுப்பினராக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் சார்பில் அஹ்ஸன் அப்துல் லத்தீப் பதவி ஏற்றுள்ளார். 2018ஆம் ஆண்டு மூதூர் பிரதேச சபைக்கான தேர்தலில் ஜாயா வட்டாரத்தில் போட்டியிட்டு 762 வாக்குகளைப் பெற்ற நிலையில் ஒரு வாக்கால் வெற்றி வாய்ப்பை இவர் இழந்திருந்தார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு கிடைத்த 01 போனஸ் ஆசனத்தின் அடிப்படையில் பெரியபால வட்டாரத்தில் போட்டியிட்ட அமைப்பின் அங்கத்தவர் எம்.எம்.எம். நசீர் ஒப்பந்த அடிப்படையில் முதல் 2 வருடத்துக்கு அந்தப் பதவியை பொறுப்பேற்றார்.

அவரின் இரண்டு வருட பதவிக்காலம் முடிவடைந்த நிலையில் மிகுதி இரண்டு வருடங்களுக்கும் அஹ்சன் அப்துல் லத்தீப் நியமிக்கப்பட்டுள்ளார்.(ஏ-ரி140)

# கூட்டமைப்பு என்ன செய்தது? நகைப்புக்குரிய கேள்வி இது

## சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 19
**போரில் சிதைவடைந்த பழைய தொழிற்சாலைகளைக் கூடச் சீரமைக்க முடியாத வக்கற்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று கேட்பது மிகவும் மோசமான நகைப்புக்குரிய விடயம் என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற வேட்பாளருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களைச் சந்திப்பதற்கான கூட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. சில வேட்பாளர்கள் வரமுடியாத காரணத்தால் அந்த நிகழ்வு இடைநிறுத்தப்பட்டிருந்தது. அந்தக் கூட்டம் பிறிதொரு தினத்தில் இடம்பெறும். எதிர்வரும் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 477 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர்.

கடந்தமுறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4 ஆசனங்களைப் பெற்றிருந்தது. இம்முறையும் நிச்சயமாக நான்கிற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளோம். பலர் கூட்டமைப்பு என்ன செய்தது என்ற குற்றசாட்டுகளை முன்வைத்துள்ளார்கள், அது பலதைச் செய்துள்ளது. குறிப்பாக நான் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் வடபகுதி முழுவதும் பெரும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தேன். அது அனைவருக்கும் தெரிந்தவிடயம். வடக்கு மாகாண அமைச்சுகளினூடாகச் செய்யப்பட்ட அனைத்து விடயங்களுமே கூட்டமைப்புச் செய்தவிடயங்கள் தான். இதேவேளை பலதடவைகள் மத்திய அமைச்சர்களாகப் பதவியில் இருந்தவர்கள் 5 ஆசனங்களை எமக்குத் தாருங்கள் தமிழரின் பிரச்சினையை தீர்க்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்களின் நோக்கம் தமிழரையே இல்லாமல் செய்வதுதானா என்ற கேள்வியை எழுப்புகிறேன். ஏனெனில் போரில் சிதைவடைந்த பழைய தொழிற்சாலைகளைக் கூடச் சீரமைக்க முடியாத வக்கற்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று கேட்பது மிகவும் மோசமான நகைப்புக்குரிய விடயம்- என்றார். (ப-110)



# மரங்கள் கடத்திய நால்வர் சிக்கினர்

வாழைச்சேனை, ஜூன் 19
வாழைச்சேனை வட்டார வன திணைக்களத்திற்கு உட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட மரங்களை கடத்திய குற்றச்சாட்டில் 4 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து சிறிய உழவு இயந்திரம் மற்றும் மரங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ். தணிகாசலம் தெரிவித்தார். வாழைச்சேனை வட்டார வனத் திணைக்களத்திற்கு உட்பட்ட ரிதிதென்னை பகுதியில் வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின்போது தனியார் காணி ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் வெட்டும் பணியில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து வெட்டப்பட்ட ஆறு சரியமாரை மரம், ஐந்து தேக்கு மரம் மற்றும் இரண்டு சரியமாரை மரக்குற்றிகள் மற்றும் மரம் வெட்டுவதற்கு பயன்படும் இயந்திர வாள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் புணாணை கோறளை ஒதுக்குக் காட்டு பகுதியில் வாழைச்சேனை வட்டார வன உத்தி யோகத்தர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது மரங்களை வெட்டி கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து ஆறு தேக்கு மரம், ஒரு முதிரை மரம், ஒரு திருக்கொண்டை மரம் மற்றும் மரங்கள் ஏற்றுவதற்கு பயன்படுத்திய சிறிய ரக உழவு இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார். (ஏ-ரி1150)

# குளவி கொட்டி ஐவர் பாதிப்பு!

பொகவந்தலாவ, ஜூன் 19
பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லின்போட், பிரிட்லேன்ட், கொட்டியாகலை ஆகிய தோட்ட பகுதிகளில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் பொகவந்தலாவ பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தபோது மரத்தில், கட்டியிருந்த குளவிகள் திடீரென கலைந்து தாக்கியுள்ளன. பறவை ஒன்று தேன் குடிப்பதற்காக குளவிக்கூட்டைத் தாக்கியதாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாக்குதலில் ஒரு பெண்ணும், இரு ஆண்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்து பொகவந்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். இருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஏ-ரி2)

## பிணைமுறிக் குற்றங்கள்;

# பிடியாணையை செயற்படுத்த கோட்டை நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜூன் 19
மத்திய வங்கியில் கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி மற்றும் மார்ச் 31 ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறிகள் ஏலத்தின்போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் அஜான் புஞ்சிஹேவாவிற்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை செயற்படுத்துமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டது.

கடந்த மார்ச் மாதம் 06 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட பிடியாணையைச் செயற்படுத்துமாறே கொழும்பு கோட்டை நீதிவான் ரங்க திசாநாயக்க சி.ஐ.டி.யின் விசாரணை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அத்துடன் எட்டாவது சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரான முத்துராஜா சுரேந்திரன் பிணையில் உள்ள நிலையில், அவரை அடுத்த தவணை விசாரணையின் போது மன்றில் முன்னிலையாகுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி மற்றும் மார்ச் 31 ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறிகள் ஏலத்தின்போது 51.98 பில்லியன் ரூபா முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 12 பேரை சி.ஐ.டி. சந்தேக நபர்களாக பெயரிட்டது. அவர்களைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்குமாறும் கோரியது. எனினும் அதில் 10 ஆவது சந்தேகநபராக பெயரிடப்பட்டிருந்த மத்திய வங்கி பொதுக்கடன் திணைக்களத்தின் முன்னாள் பிரதானி புத்திக சரத் சந்ரவுக்கு எதிராக பிடியணையையோ அறிவித்தல் ஒன்றினையோ பிறப்பிக்க போதுமான காரணிகள் இல்லை என அதனை நிராகரித்த நீதிமன்றம், முதல் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள பேப்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்துக்கு அடுத்த வழக்குத் தவணையில் மன்றில் ஆஜராக அறிவித்தல் பிறப்பித்தது.

ஏனைய 10 சந்தேக நபர்களையும் கைது செய்ய பிடியாணை பிறப்பித்து கடந்த மார்ச் 6 ஆம் திகதி கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டார். அதன்படியே பேப்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் ஒரு பணிப்பாளரான 8 ஆம் சந்தேகநபர் முத்துராஜா சுரேந்திரன் கைது செய்யப்பட்டு மன்றில் முற்படுத்தப்பட்டார் ஏனைய பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 9 பேரில் 7 பேர் பிடியாணைக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் ரீட் மனு தககல் செய்தனர். அம்மனுவின் இடைக்கால உத்தரவு கடந்த மார்ச் 13 ஆம் திகதி வழங்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் குறித்த 7 பேரும் கோட்டை நீதிமன்றில் முன்னிலையாகினர். மேன் முறையீட்டு மன்றின் உத்தரவுக்கு அமைய நீதிமன்றத்தில் முன்னிலையாகும் சந்தேகநபர்களுக்கு எதிராக எவ்வித உத்தரவுகளையும் பிறப்பிக்க வேண்டாம் என கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. எனினும் மேன் முறையீட்டு நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத சந்தேக நபர்கள் தொடர்பில், சட்ட மா அதிபர் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் நிலைப்பாட்டுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் எனவும் மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது. (ப)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோர் பதியலாம்

கொழும்பு, ஜூன் 19
ஹொங்கொங், போலந்து, ருமேனியா மற்றும் செக் குடியரவு நாடுகளில் தொழில்களுக்காக செல்ல காத்திருப்போரை பதிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறானவர்கள் தங்களைப் பதிவுசெய்து கொள்வதற்கான இரண்டாம் கட்ட பதிவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் இவ்வாறு பதிவுசெய்வோரில், வெளிநாடுகளில் பணிபுரிந்த நிலையில் இலங்கை வந்து மீண்டும் பணியிடங்களுக்குச் செல்லவுள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் எனவும் பணியகம் தெரிவித்துள்ளது. (ஏ-ரி)

# சமூகத்தொற்றைத் தடுப்பதில் இலங்கை வெற்றிகண்டுள்ளது

## பாதுகாப்புச் செயலாளர் பெருமிதம்

**கொழும்பு, ஜூன் 19**

**உலகின் பலம்வாய்ந்த நாடுகளே கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் திணறிக்கொண்டிருக்கும் நிலையில், விரைந்து மேற்கொள்ளப்பட்ட தூரநோக்குடைய செயற்றிட்டங்களின் மூலமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கை இதுவரை எந்தவொரு சமூகத் தொற்றும் ஏற்படாமல் தடுத்திருப்பதுடன், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதிலும் வெற்றிகண்டிருக்கிறது என்று பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது;
நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புக்கூறும் விதமாகவே நான் ஜனாதிபதியால் பாதுகாப்புச் செயலாளர் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறேன். அதனடிப்படையில் தீவிரவாதம், பிரிவினைவாதம், வெளிநாடுகளின் தலையீடு, இயற்கை இடர் மற்றும் தொற்று நோய் நிலைமை ஆகிய பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவற்றிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பது தேசிய பாதுகாப்பு என்ற வரையறைக்குள்ளேயே அடங்குகின்றது.
உலகிலேயே மிகவும் பலம் வாய்ந்தவை என்று அறியப்பட்ட நாடுகளே இன்றளவில் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் திணறிக்கொண்டிருக்கும் நிலையொன்று ஏற்பட்டிருக்கிறது. நெடுங்காலமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்ற வரையறையிலேயே இருக்கின்ற நாம் சமூகத்தொற்று ஏற்படாமல் பரவலைக் கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்திருக்கின்றோம் - என்றார். (ஐ)





# சமூர்த்தி உத்தியோகத்தர் நினைவாக குருதித்தானம்

யாழ்ப்பாணம்,ஜூன் 19
சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியில் காலம் சென்ற சமுர்த்தி உத்தியோகத்தர் இராமராசா மயூரனின் நினைவாக நேற்று குருதித்தான நிகழ்வு இடம்பெற்றது.
சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கி முகாமையாளர் நா.கௌரிமலர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் கலந்து கொண்டு குருதித்தானம் செய்தனர்.
சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி உத்தியோகத்தராக திறம்பட செயற்பட்டிருந்த இராமராசா மயூரன் கடந்த நான்காம் மாதம் நோய் வாய்ப்பட்டு உயிரிழந்திருந்தார். அவரின் நினைவாக சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களால் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
மயூரனின் நினைவாக சமுர்த்தி பயனாளிகளுக்கு தென்னை மரக் கன்றுகளும், பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (க-111)

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரருக்கு இன்று கொடியேற்றம்

## 100 பேருக்கே அனுமதி

முல்லைத்தீவு, ஜூன் 19
வரலாற்று சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவிழாவை 100 பேருடன் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவித்தார்.
ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவிழா தொடர்பான ஊடகச் சந்திப்பு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. மாவட்டச் செயலர் க.விமலநாதன் மற்றும் ஆலய முகாமைத்துவ சபையின் தலைவர் சி.கணேசபிள்ளை, போசகர் சி.சிவபாலகுரு ஆகியோர் அதில் கலந்து கொண்டனர்.
இதன்போதே மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவிழா இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. சகல தரப்பினருடனான முன்னோடிக் கூட்டம் கடந்த 15 ஆம் திகதி நடத்தப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு 16 நாள்கள் திருவிழா நடைபெறும். வருடாந்த திருவிழாவைச் சம்பிரதாய முறையில் தடைஇல்லாமல் மக்கள் பெருமளவில் கலந்து கொள்ளாதவாறு நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பக்தர்கள் நேர்த்திக்கடன்களை பிறிதொரு தினங்களில் செய்தால் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கமுடியும். 12 நாள்கள் மக்கள் செறிவு இல்லாத விழாவாக சாதாரண பூசையாக நடைபெறும் இறுதி நான்கு நாள்கள் மக்கள் அதிகளவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். வேட்டைத்திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழாவுக்கு மக்கள் அதிகளவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கின்ற காரணத்தால் அதற்கான பாதுகாப்பை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்கள் வரவைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
வேட்டைத் திருவிழா நேர்த்திக்கடனுடன் வருபவர்கள் முற்றுமுழுதாகத் தடைசெய்யப்பட்டுள்ளனர். நிர்வாகத்தினர் மட்டும்தான் கலந்துகொண்டு திருவிழாவைச் செய்வார்கள். தேர்த் திருவிழாவும் சிறிய தேரை குறைந்த ஆள்களை வைத்துக்கொண்டு இழுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார் (ப-19)



# இராணுவத்தில் கடமையாற்றும் தமிழ்ப் பெண்ணுக்கு யாழில் வீடு

யாழ்ப்பாணம், ஜூன் 19
ஏழு வருடங்களாக இராணுவத்தில் கடமையாற்றும் தமிழ் பெண் ஒருவருக்கு இராணுவத்தால் வீடு அமைக்கப்பட்டு நேற்று கையளிக்கப்பட்டது.
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே 252 பலாலி தெற்கு வயாவிளானில் இந்த வீடு அமைக்கப்பட்டு நேற்று கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய அந்த வீட்டைக் கையளித்தார்.
2014 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்து கொண்ட அந்தப்பெண் கடந்த ஏழு வருடங்களாக யாழ்ப்பாணப் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் ஊடகப் பிரிவில் கடமையாற்றி வருகின்றார். எனினும் அவருக்கு நிரந்தர வீடு இல்லாததன் காரணமாக யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி எடுத்த முயற்சியின் பயனாக அந்த வீடு அமைக்கப்பட்டு அவரிடம் கையளிக்கப்பட்டது என்று இராணுவத்தினர் தெரிவித்தனர். வீடு கையளிக்கப்பட்டபின்னர் மரக்கன்று ஒன்றும் இராணுவத் தளபதியால் நடப்பட்டது. (ஜ-111)

# புலோலியில் வாள்வெட்டு இருவர் மருத்துவமனையில்

கொடிகாமம், ஜூன் 19
யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலி காந்தியூர் பகுதியில் இரு கும்பல்களுக்கிடையில் இடம்பெற்ற வாள்வெட்டில் இருவர் காயமடைந்தனர். வர்த்தக நிலையம் ஒன்றும் குழுவினரால் அடித்து உடைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
முன்னரே பகைமைகொண்ட இரு குழுக்களுக்கு இடையேதான் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் சிவபுண்ணியம் தேவராஜ் (வயது -22) புவனேஸ்வரன் குகராஜ் (வயது -19) ஆகியோரே வாள்வெட்டுக்கு இலக்காகினர். அவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். பருத்தித்துறை பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (து)

# தேர்தலின் பின்னரே புதிய தலைவர்

## இ.தொ.காவின் நிதிச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பது ஓர் குடும்பம். எங்களிடையே எந்தவொரு பிரச்சினையும் இல்லை. பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னரே புதிய தலைவர் நியமிக்கப்படுவார் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், மத்திய மாகாணசபையின் முன்னாள் அமைச்சருமான மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார்.
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய பொதுச்செயலாளராக ஜீவன் தொண்டமான் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டார். பொதுச் செயலாளராக செயற்பட்ட அனுஷியா சிவராஜாவுக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. என்றார். (ப)



## யாழ். நகரில் டெங்கு குறைவு

யாழ்ப்பாணம், ஜுன் 19
யாழ்ப்பாண மாநகர பகுதியில் தற்போது டெங்குத் தாக்கம் குறைந்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் இரண்டு பேரே மாநகரில் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என்று மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. (த-17)

## மணல் ஏற்றிய சாரதிக்கு 75,000 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஜுன் 19
அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய பளை வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்று 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. மிருசுவில் கெற்பேலி பகுதியில் அவர் டிப்பரில் மணல் ஏற்றிச் சென்ற போது கொடிகாமம் பொலிஸாரிடம் சிக்கியிருந்தார்.
அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு வந்த போது அவர் தன்மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனையடுத்தே 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த-9)

### தீவகப் பகுதிகளில்

# பயிரிடப்படாத நிலங்களை கணக்கிட்டு பயிர்செய்க!

### விவசாயப் பணிப்பாளர் நாயகம் பணிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 19**
**யாழ்ப்பாணம் தீவகப் பகுதியில் பயிர் செய்யப்படாத நிலங்களை கணக்கிட்டு அவற்றில் பயிர்செய்யும் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு விவசாயப் பணிப்பாளர் நாயகம் மாவட்ட விவசாயப் பிரிவுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட பணிப்பாளர் நாயகம் தீவகத்தில் உள்ள பல்வேறு பயிர்ச் செய்கை நிலங்களை பார்வையிட்டார். இதன்போது தீவகப் பகுதியில் ஏராளமான விவசாய நிலங்கள், பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் படாமல் இருக்கின்றமை அவதானிக்கப் பட்டுள்ளது.
தீவகப் பகுதியில் பயிர்செய்யாத நிலங்களைக் கணிப்பிட்டு அவை பற்றிய விவரங்களைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதோடு பயிர்ச்செய்கை மேற்கொள்ளாமைக்கான காரணத்தைக் கண்டறியவேண்டும். காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதோடு அங்கு பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பணிப்பாளர் நாயகம் அறிவித்தல் வழங்கியுள்ளார். (ஐ-7)

## கஞ்சா சுருட்டு வைத்திருந்தாரென கைதானவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜுன் 19
கஞ்சா போதைப் பொருள் வைத்து சுற்றப்பட்ட சுருட்டு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
கொடிகாமத்தைச் சேர்ந்தவரே கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். (த-9)






## தொல்புரத்தில் இஞ்சி செய்கை

யாழ்ப்பாணம், ஜுன் 19
வலிகாமம் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இஞ்சி செய்கையை விரிவாக்கம் செய்யும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி. அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் தலைமையில் இஞ்சி நடுகை வயல் விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.
இந்தப் பிரிவில் போதனாசிரியரின் வழிகாட்டலுடன் முதன்முதலாக 0.5 ஏக்கர் வீதம் 5 விவசாயிகள் இஞ்சி செய்கையை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

### வவுனியாவில் ஆக்கிரமிக்கப்பட்ட

# குளக் காணிகளை மீட்ட கமநல திணைக்களம்

வவுனியா, ஜுன் 19
வவுனியாவில் குளத்துக் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட சட்ட வேலிகள் மற்றும் கட்டடங்களை அகற்றும் நடவடிக்கையை கமநல அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்துள்ளது.



நேற்று இரண்டு குளங்களின் நிலப் பகுதிகளை ஆக்கிரமித்து நிரந்தர மற்றும் தற்காலிக வேலிகளை அமைந்தவர்களுடைய வேலிகள் அகற்றப்பட்டன.
கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தலைமையிலான அலுவலர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்தனர்.
இதன்போது, குளங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு கோவில்குளம் மற்றும் ஆசிகுளத்தில் அமைந்துள்ள தரணிக் குளம் ஆகிய இரு குளங்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட வேலிகளை அகற்றி குறித்த காணிகள் மீட்கப்பட்டன.
அத்துடன் குளத்துக் காணிகளை ஆக்கிரமித்து நிரந்தர கட்டடங்கள் அமைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் தெரிவித்தார். (த-18)

### இனிமேல்தான்...

யக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை வாயால் சொல்ல முடியாதளவுக்கு படுமோசமாக இருக்கின்றது. இந்த நிலையில் நாடாளுமன்ற அரசியலிலிருந்து முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர விலகியதை நான் வரவேற்கின்றேன். அவர் அவ்வாறு விலகுவது எனக்கு விருப்பம் இல்லை. எனினும் தற்போதைய நிலைமையில் அவர் விலகியதை வரவேற்கின்றேன்.
மாத்தறை மாவட்ட மக்களின் பெருமதிப்புக்குரியவராக - அன்புக்குரியவராக மங்கள இருக்கின்றார். எனினும் அவர் திடீரென நாடாளுமன்றத் தேர்தல் போட்டியிலிருந்து விலகியமை அந்த மாவட்ட மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.
நாடாளுமன்ற அரசியலிலிருந்துதான் விலகியமைக்கான காரணங்களை அவர் என்னிடம் நேரில் வந்து தெரிவித்துள்ளார். அவரின் பக்கம் நியாயம் இருக்கின்றது. எனினும், நாடாளுமன்றத்தில் அவரின் பிரதிநிதித்துவம் தவிர்க்க முடியாததாகும். தான் நாடாளுமன்றத்துக்கு இனிமேல் செல்லத் தயார் இல்லை என்று அவர் விடாப்பிடியாக இருக்கின்றார். ஆனால், வெளியில் இருந்து அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க அவர் தயாராக இருக்கின்றார். இனிமேல் அவர் முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளுக்கும் நான் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவேன். ஏனெனில் மக்கள் நிம்மதியுடன் வாழ வேண்டுமெனில் இந்த நாடு உருப்படியாக இருக்க வேண்டும். நாட்டில் தற்போது நடக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். அதற்கேற்ற மாதிரி எனது அதிரடி நடவடிக்கைகளை மங்களவுடன் இணைந்து முன்னெடுப்பேன்-என்றார். (எ)

### உ/த...

மானித்த திகதியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.
பொதுமக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'உயர்தரப் பரீட்சையை நடத்த ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்ட திகதியில் மாற்றம் ஏற்படவுள்ளது. மாணவர்கள் பரீட்சைக்கு தயாராகுவதற்கு காலவகாசம் வழங்கப்படும். இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சும், பரீட்சைகள் திணைக்களமும் விரைவில் உரிய தீர்மானத்தை அறிவிக்கும். ஆசிரியர்கள், மாணவர்களின் கருத்துக்கள் பரிசீலனை செய்யப்படும் -என்றார். (ம-ஐ)

### புலிகளுடைய...

காணியில் போரின்போது வெடிபொருள்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் இடத்தில் தேடுதல் நடைபெற்றது.
குறித்த வீட்டுக்காணியில் போர் நடைபெற்ற காலத்தில் வெடிபொருள்கள் மற்றும் பெறுமதியான பொருள்கள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் தேடுதல் இடம்பெற்றது.
பொலிஸார், படையினர், கிராமசேவகர், தொல்பொருள் திணைக்களத்தினர், சிறப்பு அதிரடிப்படையினர், பிரதேச செயலக அலுவலர்கள் உள்ளிட்ட அரச திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் சுமார் மூன்று மணிநேரம் தேடுதல் இடம்பெற்றது. (க-19)

### சூட்சுமமாகக்...

கிளிநொச்சியில் இருந்து தம்புள்ள நோக்கி கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் கஞ்சா கடத்திச் செல்லப்பட்ட வாகனத்தை இனங்கண்டனர்.
கஞ்சா வைக்கப்பட்ட வாகனத்துக்குப் பாதுகாப்பை வழங்கும் நோக்குடன் அதற்கு முன்பாக கார் ஒன்றையும் கடத்தல்காரர்கள் செலுத்திச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கடத்தல் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மானவடுவின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரணித் திசாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினரால் முறியடிக்கப்பட்டது.
பொலநறுவையைச் சேர்ந்த 31 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (க-110)

## தவறிவிட்டது

16.06.2020 செவ்வாய்க்கிழமை K.K.S. Road இல் (இணுவிலுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில்) கடை கணக்கு கொப்பியும், மூக்குக் கண்ணாடியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு: 077 8025 642**

# கொரோனா இரண்டாவது அலை ஏற்பட்டால் தேர்தலை ஆணைக்குழுதான் தீர்மானிக்கும்!

## ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்பட்டால் குறித்த திகதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்பதைத் தேர்தல்கள் ஆணைக்குழுதான் முடிவெடுக்க வேண்டும்' இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாம் அலை ஏற்படாமல் தடுப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசும், சுகாதாரப் பிரிவினரும் முன்னெடுத்துள்ளனர். மக்கள்தான் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். இதேவேளை கொரோனாவைக் காரணம் காட்டிப் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து ஒத்திவைக்க முடியாது. தேர்தலைப் பாதுகாப்பான முறையில் நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க அரசு தயாராக இருக்கின்றது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கொரோனா 1,928

கொழும்பு, ஜூன் 19

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி கொரோனாத் தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 928ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து நேற்று 24 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 421ஆக உயர்வடைந்துள்ளது. இது வரை அடையாளம் காணப்பட்டவர்களில் தற்போது 496 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 11 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-22)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30 . 11 . 1948

மறைவு
19 . 06 . 2019

### அமரர் த. தவபாலன் ஜோர்ஜ்



அப்பா!
நினைவுகளால் ஒன்றாகி
நித்தம் - நினைந்து
உருகுகின்றோம்
உங்கள் நினைவுகளோடு
வாழுகின்றோம் ....... உங்கள்
வழித்தடத்தை தொடருகின்றோம்
என்றும் நீங்கா உங்கள் நினைவுகளோடு ..... நாம்

47/1 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.06.2020 புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்
**இராசப்பா
கல்யாணசுந்தரம்**

மலர்வு 01.11.1939
உதிர்வு 03.06.2020

அவர்களின் வீட்டுகிருத்திய கிரியைகள் இன்று (19.06.2020) வெள்ளிகிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கந்தையா கதிரவேலு (பவளம்)

அல்வாயை பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் தொழிலதிபர் கந்தையா கதிரவேலு (பவளம்) நேற்று (18.06.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகமுத்து தம்பதியரின் மருமகனும், தங்கமலரின் அன்புக் கணவரும், ரஞ்சன் (Euro Union,UNDP & ERP), ரதி, லதா, உதயகுமார் (நோர்வே), சாந்தகுமார் (நோர்வே), Dr. விஜயகுமார் (திருகோணமலை பொது வைத்தியசாலை), சீதா, கீதா, சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுசுயா, நாகேந்திரன் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்), காலஞ்சென்ற குலவீரசிங்கம், லக்ஷ்மி (நோர்வே), சந்திரிக்கா (நோர்வே), சர்வேந்திரா (ஆசிரியை, திரு.சண்முகா வித்தியாலயம்), யோகலிங்கம்( ஓய்வுநிலை பிரதி சுங்க பணிப்பாளர்), கார்த்திகா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, தங்கம்மா, பொன்னம்மா, குலசிங்கம் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரனும், ஆரணி (Research Scientist, Tuin University, Germany), நிதர்சனா (Program Manager-Colombo), கீர்த்தனா (மருத்துவ பீட மாணவி, யாழ்ப்பாணம்), சிந்தூரி (பொறியியலாளர்,University of Texas, Dallas, America), ஸ்மிருதி (Audiology & Speach language Pathologist), நிருதி (பொறியியலாளர்), சுகாசனன் (பொறியியலாளர்), மஞ்சரி (மருத்துவ பீட மாணவி, யாழ்ப்பாணம்), அருஷன் (Entrepreneur, America), மைவிழி, ஈழநிலா, அருண், சாருந்தன், லக்ஷிகா, ஸ்யேனி, ஆகர்சன், சாருஸ்னி, அதிசன், ஹரிஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2020) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 5.00 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

91, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

## ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லப் பணியாளர் வெற்றிடங்கள்

1. பெண் சிறுமிகள் மேற்பார்வையாளர் :-
    - வயது- 35வயது தொடக்கம் 60 வயது வரை
    - கல்வித்தகைமை- க.பொ.த.(சா/த) இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
    - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படும் சிறுவர்களை மையப்படுத்திய சமுதாய அபிவிருத்திக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.
    - இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது
    - சம்பளம்- ஆரம்ப சம்பளம் (மாதம்) ரூபா 21500.00
2. **பெண் காவலாளி**
    - வயது 35 வயது தொடக்கம் 60 வயது வரை
    - கல்வித்தகைமை
      க.பொ.த.சாதாரணதரம்
      அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
      சம்பளம்- ஆரம்பச் சம்பளம் (மாதம்) ரூபா 20000.00
3. **சமையலாளர்**
    - வயது 30 வயது தொடக்கம் 60 வயது வரை
    - கல்வித்தகைமை- க.பொ.த.சாதாரணம்
    - தொழில் 2வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
    - இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றுதல் கட்டாயமானது.
    - சம்பளம் - மாதச்சம்பளம் ரூபா 24000.00

குறிப்பு- **கல்வித்தகைமை அனுபவச்சான்றிதழ் போட்டோ பிரதி போன்ற வற்றுடன் விண்ணப்பிக்கப்படுதல் வேண்டும்.**
**ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் இணைத்துக் கொள்ளப்படும்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 30.06.2020**

தலைவர்,
ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,
வதிரி,
கரவெட்டி.
தொலைபேசி இல:-
**0212263136, 0212265069, 0775147045**

**வெள்ளவத்தையில் அறைகள்**
HOTEL VILLA வில் அறைகள் AC / NON A/C
இணைந்த குளியலறை 1500-3900 வரை.
422/A, காலி வீதி, வெள்ளவத்தை.
ராமகிருஸ்ணா செட் அருகில். **077 255 2224**

**HOME VISIT CLASSES**
English/ Tamil Medium
Accounting / English Lang' /
Arts Subject
**077 331 6402**

**ஆயுர்வேத வைத்தியர் தேவை**
ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் யாழ் நகரில் பணியாற்றுவதற்கு பெண் ஆயுர் வேத வைத்தியர் உடன் தேவை. (புதிதாக பட்டம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது).
தொடர்பு: **077 912 8944**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com


## வட இலங்கைச் சங்கீத சபை - யாழ்ப்பாணம்
### பரீட்சைகள் பிரிவு
### பரீட்சைக் கடமைகளுக்காக வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்துவதற்கான கூறுவிலை கோருதல்

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர்/ நொவம்பர் மாதத்தில் கொழும்பு, பண்டாரவளை, கண்டி, ஹற்றன், மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பரீட்சை நிலையங்களுக்கு உத்தியோகத்தர்களுடன் (4 பேர்) வினாத் தாள் பொதிகளையும் எடுத்துச் செல்லுதல் மற்றும் மீளத் திரும்புத லுக்குப் பொருத்தமான உரிய தராதரங்களை உடைய இலகுரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வட இலங்கைச் சங்கீத சபை அலுவலகத்தில் (கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்) விண் ணப்பப் படிவங்களையும் அறிவுறுத்தல் கையேட்டினையும் ரூபா 500/ செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் - **0212242319**

**விண்ணப்ப முடிவுத் திகதி 15.07.2020**
**செல்வரட்ணம் சந்திரராஜா**
**கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் கல்வி வலயம்.**
**தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை- யாழ்ப்பாணம்.**
**15.06.2020**

# மரண அறிவித்தல்



## கந்தர் சிவஸ்கந்தா (PM)
### (முன்னாள் உபதபாலதிபர் நாகேந்திரமடம், அராலி வடக்கு)

யாழ் அராலிவடக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், பிரான்ஸை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தர் சிவஸ்கந்தா கடந்த (17.06.2020) புதன்கிழமை அதிகாலை பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் கந்தர் (ஓய்வுபெற்ற அதிபர்) தவக் கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமசாமி- பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் (ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குனர், ஸ்ரீலங்கா ரெலிகொம்) அன்புக் கணவரும், சசிகலா (இலங்கை), சசிரேகா (இலங்கை), சசிதரன் (பிரான்ஸ்), சசிப்பிரபா (பிரான்ஸ்), சசிதேவி (பிரான்ஸ்), சயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சலோஜினா (அவுஸ்திரேலியா), விபுலஸ்கந்தா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), ரமணஸ்கந்தா (JSAC), தவஸ்கந்தா (யாழ் லீக் பொருளாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆனந்தராசா, சிவசுப்பிர மணியம், சுரேஸ்குமார், தீபனா, மங்களகௌரி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் (சட்டத்தரணி), அருளா னந்தசிவம் (கல்வித்திணைக்கள லிகிதர்), பேபி சரோஜா (ஓய்வுபெற்ற உபதபா லதிபர், வியாவில்) மற்றும் வசந்தா, நிர்மலா, ராதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரதீபன், லக்ஷிகா-சுரேந்திரன், மோகனதீபன், நிஷாந்த், டர்சிகா, ரேணுகா, தேவேஷ், துவாரகா, சுருதிகா, அபூர்வன், ஆரபி, அகரன், சரோமி, சபீனா, சயூரி, சரோன், சைந்தவி ஆகியோரின் அன்புப் பேரனும், சஷ்வின், இஷானிகா, ஆகியோரின் அன்புப் பூட்டனும், அகல்யா, சுகன், நிரூபன் ஆகியோரின் ஆசை மாமாவும், சங்கீதா, பிரீத்தா, கீர்த்திகா, பிரவீந்த், ராதவன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை (25.06.2020) 95 RUE MARCEL SEMBAT, 93490 VILLETANEUSE, FRANCE எனும் இடத்தில் முற்பகல் 9.30 மணியளவில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பி.ப 1.30 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.06.1940 | 17.06.2020 |

**தொடர்புகளுக்கு:**
**571/1, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 435 0097**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி தம்பு பூரணம்

சிறுப்பிட்டியை பிறப்பிடமாகவும், தலங்காவற் பிள்ளையார் கோவிலடி திருநெல்வேலி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பு பூரணம் நேற்று (18.06.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி யோகம்மா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற தம்புவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சண்முகம், ராசு, தயாபரசிவம், நடராசா மற்றும் கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சந்திர சேகரன் மற்றும் இந்திராதேவி, ஞானசேகரன் (பிரான்ஸ்), குண சேகரன் (ஜேர்மனி), ராசசேகரன் (லண்டன்), காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சிவனேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வ ராணி, தியாகேஸ்வரன் (சுவிஸ்), திலகேஸ்வரி (பிரான்ஸ்), சரோஜா, சசிகலா (லண்டன்), கனகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2020) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.30 மணிக்கு திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல.
**077 527 2307**

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு
08
02
1936



இறப்பு
18
06
2020

### துரைச்சாமி பத்தர் அம்புஜம்

306, K.K.S. வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமா்கவும் திருநெல்வேலியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைச்சாமி பத்தர் அம்புஜம் நேற்று (18.06.2020) காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமண ஆச்சாரியார் முல்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைச்சாமி பத்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா பத்தர் அஞ்சம்மா தம்பதி யரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி (Canada), பக்கிரி சாமி ஆச்சாரியார் (Canada) மற்றும் வேணுகோபால் ஆச்சாரியார், கெங்காதரன் ஆச்சாரி, கமலவள்ளி (Canada), இராஜேஸ்வரி, மகேஸ்வரி (ஜேர்மன்), நாகேஸ்வரி, ஜெகநாதன் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நட ராஜா பத்தர், காலஞ்சென்ற குணசேகரம் பத்தர் (வவுனியா), சு லோசனா, நாக ராணி, அனுசியா, திலகவதி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலச் சந்திரன் ஆச்சாரியார் (சந்திரன்), சந்திரவதனி (துச்சுத் தொழிற்சாலை, பால் பண்ணை, திருநெல்வேலி), காலஞ்சென்றவர்களான நாகராசா ஆச்சாரி, சண் முகநாதன் ஆச்சாரி மற்றும் வேணி, ராஜம் ஆகியோரின் மாமியாரும், காலஞ் சென்றவர்களான இராமையா பத்தர், தர்மையா பத்தர் (கந்தையா) மற்றும் கணபதிப்பிள்ளை பத்தர் (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2020) வெள்ளிக்கிழமை 10/6, கம்பஸ் லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணததில் உள்ள அன்னாரின் மகளின் வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணி யளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 564 9284, 021 221 7731**

தகவல் :பாலச்சந்திரன்
(மருமகன்)

## நீங்காத நினைவலைகளில் பதினொரு ஆண்டுகள்...


**மலர்வு :18.07.1930** **உதிர்வு : 22.06.2009**

### அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

**(Retired MSO Jaffna Post Office)**

**திதி :- சதுர்த்தசி 19.06.2020 வெள்ளிக்கிழமை**





வைகையில ஊர்முழுக வல்லூரும் சேர்ந்திடுக
கைபிடியாய் கூட்டிவந்து கரைசேர்த்து விட்டவரே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
பல்லாண்டு சென்றிடினும்
ஆறவில்லை எம் துயர்.

**என்றும் உங்கள் நினைவுடன்**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக இன்று (19.06.2020) வெள்ளிக்கிழமை கைதடி வீரகத்திப் பிள்ளையார் சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று **தெல்லிப் பளை மகளீர் இல்லம், சிவபூமி முதியோர் இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு உணவு உபசார மும், 21.06.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று கீரிமலை அன்னதான மடத்திலும், 25.06:2020 வியாழக்கிழமை நாவற்குழி திருவாசக மண்டபத்திலும் அன்னதான** நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

குடும்பத்தினர் சார்பாக

**மகன் – நாகராஜா விஜயகுமார்**
**சுவிஸ்.**

## கோத்தாபயவின்...

எனக் கடுமையாகச் சாடியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் நீண்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'2020 ஜுன் மாதம் 2ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஊடாக நிறுவப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணி தொடர்பில் கருத்து வெளியிட முன்பாக, நான் சில அவதானிப்புக்களைப் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

முதலாவதாக இலங்கை பல்லின, பன்மொழி, பல மத, பல்கலாசாரம் கொண்ட ஒரு பன்முக நாடாகும். இரண்டாவதாக இலங்கை 9 மாகாணங்களை உள்ளடக்கியிருப்பதுடன், அவற்றில் ஒன்றே கிழக்கு மாகாணமாகும். மூன்றாவதாக கிழக்கு மாகாணம் பல்லினத்தவர் வாழும் மாகாணமாக இருப்பினும் கூட, அங்கு தமிழ்மொழி பேசுபவர்களே பெரும்பான்மையானவர்களாவர். நான்காவதாக தற்போது நிறுவப்பட்டுள்ள செயலணியின் உறுப்பினர்கள் அனைவரும் சிங்களவர்களாவர். அதனூடாக இந்த நாட்டின் பெரும்பான்மையாக விளங்கும் சிங்கள பௌத்த சமூகத்தவரின் நலன்களை மாத்திரமே இது கவனத்தில் கொண்டிருக்கிறது என்பது தெளிவாக வெளிப்படுகின்றது. ஐந்தாவதாக ஏன் ஏனைய மாகாணங்கள் விடுபட்டிருக்கின்றன? ஏன் ஏனைய மதங்கள் விடுபட்டிருக்கின்றன? என்ற முக்கிய கேள்வியையும் இது ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழ் இந்து மக்கள் தமது வேர்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் பதிக்கவில்லை. மாறாக இந்த நாடு முழுவதும் வாழ்கிறார்கள் என்பதால் ஓர் இலங்கைத் தமிழன் என்ற வகையிலும், இந்து என்ற வகையிலும் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறேன்.

இலங்கையின் சிறந்த வரலாற்றாசிரியர்களின் ஒருவரான பி.ஈ.பீரிஸ் அவரது வரலாற்று ஆய்வுகளின் பிரகாரம், விஜயனின் வருகைக்கு முன்பே இலங்கையில் சிவனுக்கான ஐந்து ஈஸ்வரங்கள் காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். இவற்றில் திருக்கோணேஸ்வரம் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் அமைந்திருக்கிறது. இதன் சிறப்புக்கள் பற்றி கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த வரலாற்றாசிரியரின் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த அப்போதைய இந்தியப் பிரதமரின் பெரும் பாராட்டையும் பெற்றது.

மேலும் தற்போது கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுடன் தொடர்புடைய சில தகவல்களைக் கூறுவது பொருத்தமாக இருக்கும். இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை உள்ளடங்கிய கிழக்கு மாகாணத்தை பெரும்பான்மையானோர் சிங்கள மொழியைப் பேசும் பகுதிகளாக மாற்றுவதற்குக் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது நன்கறிந்த விடயமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்கள் என்ற ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன. 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இவ்விரு மாகாணங்களையும் இணைத்தல் பற்றிக் குறிப்பிடப்பட்ட போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் தமிழ்பேசும் மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர் என்ற உண்மையை மழுங்கடிப்பதற்குத் தொடர்ச்சியாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் தமிழ் மக்களின் உறுதியான எதிர்ப்பின் ஊடாக இம்முயற்சிகளை ஓரளவிற்குத் தடுக்க முடிந்திருக்கிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலும் இந்துக்கள் வணங்கும் ஆலயங்கள் பெருமளவில் உள்ளன. குறிப்பாக தெற்கில் கதிர்காமம், தொண்டேஸ்வரம் மற்றும் மேற்கில் முன்னேஸ்வரம் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். இவற்றில் தொண்டேஸ்வரம் தற்போது சிதைவடைந்து வருவதாகக் கூறப்பட்டும் கூட, தொல்பொருள் திணைக்களம் அதனை சீரமைத்துப் பாதுகாப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாதது ஏன்? இவைபோன்று நாடளாவிய ரீதியில் இந்துக்கள் பாரம்பரியமாக வழிபடும் பல்வேறு ஆலயங்கள் உள்ளன. தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை மாத்திரமே முன்நிறுத்துகின்றது என்றும், ஏனைய மதங்களின் நியாயமான நலன்களுக்குத் தீங்காக செயற்படுகிறது என்ற பெயரைப் பெற்றுக்கொண்டுவிட்டது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் கல்வெட்டுக்களுடன் கூடிய பௌத்த கோவில்கள் இருக்கின்றன. தமிழ்க் கட்வெட்டுக்களுடன் சிதைவடைந்த பௌத்த விகாரைகள் உள்ளன. இவையனைத்தும் முற்பட்ட காலத்தில் தமிழ் இந்துக்கள் புத்தரின் போதனைகளைப் பின்பற்றியிருக்கி றார்கள் என்பதையே காண்பிக்கின்றன. புத்தர் ஒருபோதும் இந்துமதத்தை எதிர்க்கவில்லை. தொல்பொருள் திணைக்களம் இந்த உண்மைகளை வெளிப்படுத்துவதற்குத் தவறியமைக்கான காரணம் என்ன? புத்தரின் பெயரால் தற்போது சிலர் போதிக்கின்ற கடும்போக்குவாதக் கொள்கைகளை உண்மையில் அவர் பின்பற்றவில்லை. கௌதம புத்தரைப் பின்பற்றுவதாகக் கூறுபவர்கள் உண்மையில் அவரது போதனைகளைப் பின்பற்றுவார்களாயின் இலங்கை அமைதியின் இருப்பிடமாக மாறும்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கு எவ்வளவு நிலப்பரப்பு தேவை என்பதை அடையாளங்கண்டு, அதனை தொல்பொருள் திணைக்களத்திற்கு உரித்துடையதாக்குவதற்கான சட்டரீதியான நடவடிக்கைகயை எடுப்பது தற்போது நிறுவப்பட்ட ஜனாதிபதி செயலணிக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களில் ஒன்றாக இருக்கின்றது. இதன்படி நோக்குகையில் பௌத்த மதத்தையும், தொல்பொருள் சின்னங்களையும் பாதுகாத்தல் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தினால் உடமையாக்கப்படும் நிலப்பரப்பில் சிங்களவர்களைக் குடியமர்த்தி அதனூடாக கிழக்கு மாகாணத்தையும், இயலுமான வரையில் வடக்கு மாகாணத்தையும் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களாக மாற்றியமைத்து, இருமாகாணங்களுக்கும் இடையிலான மொழி ரீதியான தொடர்ச்சியை இல்லாமல் செய்வதே இந்தச் செயலணியின் மூலமாக அரசு அடைந்துகொள்ள எதிர்பார்க்கின்றது.

புதிதாக எந்தவொரு காணிகளையும் கையகப்படுத்தாமல் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என்பதுடன், அதுவே மக்கள் மத்தியில் அமைதியையும், நல்லெண்ணத்தையும் பேணுவதற்கான ஒரே வழியுமாகும்' என்றுள்ளது. (ம-22)

## பதவி...

கவில்லை' - என்று மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன் நேற்று தெரிவித்தார்.

மத்திய வங்கி ஆளுநர் பதவியில் இருந்து விலகுவதற்குப் பேராசிரியர் லக்ஷமன் தயாராகிவிட்டதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இந்த நிலையிலேயே நேற்று அவர் அந்தத் தகவலை நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் மத்திய வங்கி அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பு ஓரிரு நாட்களுக்கு முன்னர் நடைபெற்றது. இதன்போது குறித்த வங்கியின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

## பொறுப்புக்கூறலில்...

கவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கே இருக்கின்றது. அந்தவகையில் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறியமையின் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தினமன்று குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனவே, இந்தச் சம்பவத்துக்கு நல்லாட்சியின் இரு தலைவர்களான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்'- என்றார். (ம-22)

## ராஜபக்ஷவினர்...

தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமையிலான புதிய அரசில் தமிழ் மக்களுக்கான தீர்வு எத்தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் வழ்ங்கப்படும் என்று மஹிந்த அணியினர் தெரிவித்து வரும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஐக்கிய தேசியக் கட்சி தனியாட்சி அமைத்தால் மாத்திரமே தமிழர்களுக்கான தீர்வு சாத்தியப்படும். தமிழ் மக்களின் மனதை வென்றவர்கள் நாம். அவர்களும் எம்மை முழுமையாக நம்பினார்கள். அதனால் நல்லாட்சியில் அரசியுல் தீர்வைத் தவிர தமிழர்களின் ஏனைய பிரச்சினைகளுக்கு எம்மாலான தீர்வுகளை வழங்கினோம்.

நல்லாட்சியில் புதிய அரசமைப்புப் பணிகளையும் முன்னெடுத்தோம். ஆனால், அன்று எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த ராஜபக்ஷ அணியினர் அதனைக் குழப்பியடித்துவிட்டனர். நாடாளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் அவர்கள் இனவாதக் கருத்துக்களைத் தெரிவித்து பௌத்த தேரர்களையும் சிங்கள மக்களையும் எமக்கு எதிராகத் திருப்பினர். அதையடுத்தே புதிய அரசமைப்புக்கான பணிகளை இடைநிறுத்தினோம். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தமிழ் மக்களுக்கும் வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

இவ்வாறான குழப்ப நடவடிக்கைகளில் ஈடுபட்ட ராஜபக்ஷ தரப்பினர் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் அரசியல் தீர்வு வழங்க முன்வரமாட்டார்கள். இதை உணர்ந்துதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷவை நிராகரித்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சி தனியாட்சி அமைத்தால் மாத்திரமே தமிழர்களுக்கான தீர்வு சாத்தியப்படும்- என்றார். (எ)

## மைத்திரி...

திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, முன்னாள் பிரதமரின் ஆலோசகர் எஸ்.பாஸ்கரலிங்கம் மற்றும் மக்கள் வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர் ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரால், பதில் பொலிஸ்மா அதிபருக்கு இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் நிஷாரா ஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கூட்டணியமைத்திருந்தாலும் அரசியல் ரீதியிலான போட்டியில் தனித்தே செயற்படும் எனவும், நல்லாட்சி அரசின் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் எனவும் மஹிந்த அணியினர் சில தினங்களாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (எ-22)

## காட்டாட்சிக்கு...

ஆட்சி செய்வது என்று மக்களே தீர்மானிப்பார்கள். யாரை வீட்டுக்கு அனுப்புவது என்றும் அவர்களே முடிவெடுப்பார்கள்' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

'அதிகார வெறித்தனத்திலும் பதவி ஆசையிலும் இருப்பவர்களுக்கு எதிராக மங்கள சமரவீரவுடன் இணைந்து அதிரடி ஆட்டம் காட்ட நான் தயாராக இருக்கின்றேன்' என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்திருந்தார். இது தொடர்பில் மங்களவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்ற அரசியலிருந்துதான் நான் விலகியிருக்கின்றேன்..ஆனால், செயற்பாட்டு அரசியலில் மக்களுடனும் சந்திரிகா போன்ற அரசியல் விற்பன்னர்களுடன் நான் சேர்ந்து இயங்குவேன். சந்திரிகா பழுத்த அரசியல்வாதி. 2015இல் ஆட்சி மாற்றம் இடம்பெறுவதற்கு அவர் வெளியிலிருந்து பெரும்பணியாற்றினார். தற்போது நாடாளுமன்ற அரசியலிருந்து நாம் விலகியிருந்தாலும் நாடாளுமன்றத்துக்கு யார் செல்ல வேண்டும் என்பதை மக்களுடன் சேர்ந்து தீர்மானிப்போம். மக்களின் அனுமதியுடன்தான் எவரும் ஆட்சிக்கு வரலாம். அதுபோல் மக்களின் அனுமதியுடன்தான் அதிகாரத்தில் உள்ளவர்கள் எதையும் செய்யலாம். அதைவிடுத்து ஆட்டம் போடுவோர் வீட்டுக்குத்தான் போவார்கள்' - என்றார்.

(ம-22)

# தமிழ் மக்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிடைக்காது!

## பொதுக்காரணிகளின் நிமித்தமே தீர்வு என்கின்றார் ரம்புக்வெல



**கொழும்பு, ஜூன் 19**

**தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு அரசியல் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு வழங்கப்படாது. பொதுக் காரணிகளின் நிமித்தம் தீர்வு வழங்கப்படும். அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் புதிய அரசில் பரிசீலனை செய்யப்படும். அனைத்து இன மக்களும் புதிய அரசில் உரிமை கொள்ளவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.**

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமோக வெற்றி பெறும் என்பதை உறுதியாகக் குறிப்பிடவேண்டும். ஆளும் தரப்பினர் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் எனக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர். அவர்களின் கருத்தும் வரவேற்கத்தக்கது.

அரசமைப்புத் திருத்தம், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கொண்டு கூட்டமைப்பினர் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். தமிழ் மக்களின் குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூட்டமைப்பினர் எந்தக் காலத்திலும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு நல்லாட்சி அரசை ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அரசமைப்பைத் திருத்தவும், நாட்டின் இறையாண்மைக்குப் பங்கம் விளைவிக்கும் விதத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வையும் கூட்டமைப்பினர் கோருகின்றனர். அதை ஒரு போதும் செயற்படுத்த முடியாது. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் திருத்தியமைக்கப்பட வேண்டும். அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். புதிய அரசில் அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் தொடர்பாக எழுந்துள்ள யோசனைகள் முழுமையாகப் பரிசோதனை செய்யப்படும். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். இந்தத் தீர்வு அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமையாது. அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தீர்வு முன்வைக்கப்படும்.

புதிய அரசு அனைத்து இன மக்களையும் ஒன்றுபடுத்தியதாக அமைய வேண்டும். அதற்கான செயற்றிட்டங்களைச் செயற்படுத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசில் அனைத்து இன மக்களும் உரிமை கொள்ளவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு- என்றார். (எ)



## வாள்களுடன் வீடு புகுந்து மோட்டார் சைக்கிளுக்கு தீ!

### நாய்க்குட்டிகளும் கடத்தல்

வவுனியா, ஜூன் 19

வாள்களுடன் சென்ற கும்பல் ஒன்று வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எரித்ததுடன், அங்கிருந்த விலையுயர்ந்த நாய்க் குட்டிகளையும் கடத்திக்கொண்டு தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை வவுனியா, கூமாங்குளத்தில் நடந்துள்ளது.

அந்தக் கும்பல் வீட்டின் கதவு மற்றும் ஜன்னல்களையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பாதுகாப்புக் கமரா பதிவுகளைக் கொண்டு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)



## மாமனாரின் வாகனம் பெற்றோல் ஊற்றி எரிப்பு

### மருமகனுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 19

மாமனாரின் முச்சக்கரவண்டியைத் தீ வைத்து எரித்த மருமகனை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டெலிகொம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாமனாரின் முச்சக்கரவண்டியை பெற்றோல் ஊற்றி எரித்துவிட்டு மருமகன் தலைமறைவாகியுள்ளார்.

இந் நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை குறித்த சந்தேகநபர் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

**வேலையாள்கள் தேவை**

கொக்குவிலில் இயங்கும் சைவ உணவகத்துக்கு வேலையாள்கள் தேவை.

1. சமையல் உதவியாளர்
2. உணவு பரிமாறுபவர்
3. அப்பம் போடத் தெரிந்தோர்.

தொடர்புகளுக்கு:
**076 000 1695, 077 844 3590**

**புலமைப் பரிசில் வகுப்புக்கள்**

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் தனிப்பட்ட வகுப்புக்கள் புதிய பாடத் திட்டத்துக்கமைவான கடந்த கால வினாத் தாள்களுடனான கற்பித்தல்

**077 0289 888, 076 663 0090**

## பொதுத்தேர்தலில் வெல்வேன் சிறிகொத்தவைப் பிடிப்பேன்!

### சஜித் சூளுரை



கொழும்பு, ஜூன் 19

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவைக் கைப்பற்றுவேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீர்கொழும்பில் அவர் தனது கட்சியின் பிராந்திய அலுவலகத்தைத் திறந்தார். அந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது தவறான நிர்வாகம் காரணமாக நாடு வீழ்ந்துள்ளது. ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் லீசிங் கம்பனிகள் வாகனங்களைக் கடத்துகின்றன. அரசின் உத்தரவை அவர்கள் மதிக்கவில்லை. அரசு மாபியாக்களுக்கு அடிபணிந்துள்ளது. ரின் மீன், பருப்பு ஆகியவற்றுக்கு ஜனாதிபதி அறிவித்த கட்டுப்பாட்டு விலை என்ன ஆனது?. இதனிடையே இந்த அரசு ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஆயிரம் ரூபா என்று தீர்மானித்தது. ஆனால் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னர் எமது ஆட்சியின் கீழ் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ)



## பொதுத்தேர்தல் சவால் இல்லை!

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதியாகக் கடமையாற்றியதால் அமையவுள்ள புதிய அரசில் எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்று மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: கட்சியில் உள்ள பலரின் வேண்டுகோளுக்கு அமையவே பொதுத்தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன். பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டுவது எனக்குச் சவாலான விடயம் அல்ல. பொலனறுவையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சாராத அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் நான் அரசியலுக்குக் கொண்டுவந்த குழந்தைகள். தன் மீது குற்றஞ்சுமத்தும் பலரும் மோசடியாளர்கள், திருடர்களே. அவர்கள் அனைவரது முகமூடிகளையும் என்னால் அகற்ற முடியும்- என்றார். (எ)

## திருகோணமலை மாவட்டத்தில் 288,868 பேர் வாக்களிக்கத் தகுதி

திருகோணமலை, ஜூன் 19

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 2 லட்சத்து 88 ஆயிரத்து 868 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என கிழக்கு மாகாணப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார். 4 பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய 189 பேர் தேர்தலில் போட்டியிடுவதுடன் இவர்கள் 13 அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகள் மற்றும் 14 சுயேச்சைக் குழுக்களைச் சார்ந்தவர்களாகும். (ஐ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.